உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# விபரீதவிற்பன்னவிபஞ்சநி.

இஃது,

திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகராதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளவர்கள்

மாணாக்கர்களி லொருவரும்

சென்னை முத்தியாலுபேட்டை

பூர்வகலாப்பிரசங்கநிகேதனசபை

சென்னை புதுவண்ணாரப்பேட்டை

வித்தியாவிர்த்தி நிலயசபை

ஆகிய இவற்றின் உபந்நியாசத் தலைவருமாகிய

க. வ. திருவேங்கடநாயடவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை சபையார்களால்

சென்னை:

கலாரத்நாகர யந்திரசாலையில்

அச்சிற்பதிக்கப்பட்டது.

சார்வரிஸு மகரரவி.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIB
BESANT NAGAR, MADRAS-600

உ

சிவசண்முகன்றுணை.

விபரீதவிற்பன்னவிபஞ்சநி யென்னும் இது, டெம்பாலும் திராவிடப் பிரகாசிகையென்னும் புத்தகத்தில் ஸ்ரீ நக்கீரதேவநாயனார் ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் ஸ்ரீ வியாசமுனிவரர் ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியராதியரால் அருளிச்செய்யப்பட்டுள்ள நூலுரையாதிகளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இழித்துரையாடியிருத்தலைத் தக்கசமாதானங்களால் பரிகரித்து அந்நூலுரையாதிகளின் பெருமைகளையும் கண்டனாசிரியராவார்க்குரிய இலக்கணமாகியவற்றையும் இனிது தேற்றுவதொரு அரிய நூலாம்.

இதன்விலை அணா - உ.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# விபரீதவிற்பன்னவிபஞ்சநி.

---

## தற்சிறப்புப்பாயிரம்.

நிலவு மன்பர்தஞ் செயற்கலை நிகழ்வுறு மிடுக்கண்
பலவு நீத்தருள் கணேசனு இயலையும் பாரிற்
குலவுற் றெம்மையா ளிராமலிங் கக்குர வனையுங்
கலவு மன்பினிற் றொழுதிந் நூல் கட்டுரைக் குதுமால்.

---

அமிழ்தினு மினியசெந் தமிழிலக் கியங்களு
மைந்திலக் கணமொடு முந்துசாத் திரங்களுஞ்
செவ்விதி னாராய்ந் தவ்விய மவித்த
மூதறி ஞர்க்குமுன் னேறுவ தியாதெனின்:—
பலகலைப் பயில்வொடு மிலகியல் பறிவும்
வாய்மையு மிருமனத் தூய்மையு நிறையு
முலகியல் வழக்கினும் புலனெறி வழக்கினுஞ்
சிறத்தலும் பொறையு நிறுத்துசொல் வன்மையுட்
பொச்சாப் பின்மையு மெச்சால் பினர்களு
மிழுமென் மொழியும் விழுமிதி னமைந்து
நொதுமலர் பகைவர் முதியநட் பினரெனு
முப்பகுதி யினர்க்கு மொப்பநிற் றலைமதிஇக்
“கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயி” னென நவிற்றுறு

மருந்தமிழ் மறைக்குப் பொருந்திலக் காகி
யக்கியர் வரூஉவென் தவ்வரூஉக் களைதல்வாய்த்
தெக்கணை யருப்புற முற்தம குணைத்தராய்
நீக்கமி லறிஞரால் போக்கியபூர பத்திரம்
துன்ஜுபு குறுகில மன்னரா லலாது
பொருகில மன்னரான் மருவதி காரம்
பெற்றவ ரோபிற வற்புவ பியற்றிய
நூலுரை யாதிபு மொழுக்கல் வழுக்க
ளனைகளைக் களைந்தை கவையில வாக்கலுங்
கதிகா ரிகமென்னன் மதிமா லறிஞர்
பலர்க்கு மினையக்கூறோர் கலந்தரு துணிபே.

அங்ஙனமாக, இத்தகைமைக்கு ஒருவாறு தகுதியுடையராய் இக்காலத் திருக்கின்றோர், "இல்லமை யிகழ்தி யில்லை நல் லற-மில்லைகால் வருமைமாற் பரம மில்லையா - மில்லையா னுக்கார கமில்லை யாரிய - மில்லைகல் லொழுக்கமாக் கலியி லென்பவே." என்னுங் கலக்கடாதல்சனம், கலியிலினிலைமைக்கஞ்சி, "அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை-யாரிரு ளுய்த்து விடும்." என்பது துணிந்து, தாம் புலவரென்னைத் பண்டிதர் வித்துவானாதிய பெயருடைமையாற் சிறிது தோற்றுவித்தும் தோற்றுவியாம லும் மறைந்தொழிக்கின்றார்; சிலரோ, "குட்டுதற்கோ பிள் ளைப்பாண் டியனிங் கில்லை குறும்பியளாக் காதைக் குடைந்து தோண்டி - யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை யிரண் டொன்று முடிந்ததலை யிறங்க விட்டு - வெட்டுதற்கோ கவி யொட்டக் கூத்த னில்லை விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித் - தெட்டுதற்கோ வழியில்லாத் துரைக ளுண்டு தேச மெங்கும் புலவரெனத் திரிய லாமே." என்றபடி மேற்கிளந்த கலைப்பயில்வு முதலியன முறையிற் பெறுதுவைத்தும், முன் னோர் நூல்களினும் அவற்றினுரைகளினும் நன்குபயிலுமுன் னரே தாஞ் சிற்சிலசெய்யுட்க ளியற்றலும் வாக்கியங்களைத்

திரித்துச் செறித்துவரைதலும் கேட்போர்வெருளுமாறு நெறிப்படப் பகட்டுமொழிகள்பல பகராதுமாதியவற்றிற் சிறிது பயின்றுகொண்டு, அவ்வளவானே சிறுபெண்கள் சிறுசோறட்டுண்டு தேக்கித் தம்மிலே களிக்குமாறுபோலத் தம்மையொரு பெரும்புலவராகப் பாராட்டி, வித்துவான் மகாவித்துவானாதியபெயர் தாமேகொண்டு, மற்றையோர் தம்மறிவு வளர்ச்சிப் பொருட் டியற்றியனவும் அச்சிற்பதித்தனவுமாகிய செவ்விய நூலுரைகளையும் அழுக்காற்றால் தந் தீவாய்மொழிகளாலும் பத்திரிகையாதியவற்றாலும் இழித்துரையாடிச் செம்மாக்கின்றனர்.

அவருள்ளும், வடகோவைச் சபாபதிநாவலரென்பவ ரொருவர், இந்நீர்மையின்மிக்கு, மாதமொருமுறை வெளிவருமெனக்குறித்து ஆண்டிக்கொன்றாக இரண்டுவெளியிட்டு அதற்கும் ஆற்றலின்மையிற் கைவிடப்பட்டொழிந்த தமது சுதேசவர்த்தமானியினும், மற்றும் ஞானாமிர்தம் திராவிடப்பிரகாசிகை யென்பவற்றினும், முற்காலத்தவரையும் தற்காலத்தவரையும் வாளா வசைமலியச் சில வரைந்திருக்கின்றனர். அவற்றினுண்மை யுணராதார் வசனப்பகட்டான் இவர்குறிப்பனவும் பொறிப்பனவும் வாய்மையவெனவே மதித்து மம்மர்கோட்படுவாராகலின், அன்னவர் மருளாவாறு அவை வாயன்மையவாதலும் இச்செயல்பூண்டற்கு இவர் அதிசேயரேயல்லது ஒருவாற்றானும் அணுக்கரன்றென்பதும் புலப்படுப்பான்புக்கு, ஷை திராவிடப்பிரகாசிகையில் ஈண்டைக்கு இன்றியமையாதனமட்டும் சங்கிரகித் தநுவதித்து, அவற்றியல்பு சிறிது விளக்குதும்:— யாதுபற்றி அப்பிரகாசிகைநூலினையே இலக்காகக் கொண்டதெனின்;—அஞ்ஞானாமிர்த முதலியவற் றெழுதியவனைத்தும் இறப்பவும் இதனுள் தோற்றியனவாக அவையும்பிறவும் தொகுத்துவிரித்துக் கத்தியரூபமாக இவரானியற்றப்பட்டு இது, காண்போர்க்கு அஞ்சியலுடைத்தாகிக் கழிமங்கலத்ததாய்ப் பாடையியல்புமுன்னரும், தமிழின்றெய்வ மாட்சிமுதலிய பின்

ருங்கொண்டு இவர்சித்தாந்தமனைத்துந் திகழ்த்திநிலவுவதென விருக்கப்படுவதோர் சிறப்புநோக்கி, அசுமலோஷ்ட நியாயத்தால் இதனையே இலக்காகக் கொண்டமைதென்க.

தெய்வத்திருவருட்பதிவால் தோலாநாவின் மேலோரான பெரியார்செய்த நூலுரைகளை அருளிச்செய்தவென்றும் அன்னரல்லார்செய்த நூலுரைகளை இயற்றியவென்றும் வழங்கல் பெரும்பான்மை மரபேயாக, இவர் அதிதெய்வீகம்பெற்ற கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளாதியோ ரருளியவற்றை இயற்றப்பட்டவெனவும், உய்யவந்ததேவநாயனார் முதலியோரருளிய திருவுந்தியாராதியவற்றைமாத்திரம் அருளிச்செய்தவெனவும் வெளியிட்டனர். பிந்தியவை, நிகமாகமங்களின் உண்மைப்பொருட்சாரமாய் ஏனைச்சமயங்களைப் பூர்வபக்கமாக்கிச் சைவசமயமே மெய்ச்சமயமெனச் சித்தாந்தஞ் செய்வவாகலின் அந்நூற்பெருமைதோன்ற அருளிச்செய்தவென்றும், கந்தபுராணமாதியவும் சித்தாந்தக் கருத்துளவேனும் அவற்றைக் கௌணமாகவும் பற்பலசரிதங்களையே முக்கியமாகவுங் கொண்டுள்ளமையின் இவைதோன்ற இயற்றப்பட்ட வென்றும் குறிப்பித்ததெனின்,—இவ்வாரம்புகடக்கத் திருக்களிற்றுப்படி சிவஞானசித்திமுதலியவற் றங்ஙனமின்றிச் சிவஞானபோத பாடியகாரரை விசேடித்தவழியெல்லாம் அவரருளிச்செய்தவற்றைமட்டும் 'அருளிச்செய்த' என்றமைத்தவன்? அருளிய இயற்றிய செய்த பாடியவென இங்ஙனம் பிரயோகித்தமை இயற்றிய வென்னும் ஒருபொருட்பற்றியல்லது விகற்பித்தன்றாம் பிற வெனின்,—ஒழிவிலொடுக்கமாதியவும் சாத்திரங்களேயாகவும் அவற்றின் மறந்தும் அருளியவென்னுஞ்சொல் பிரயோகிக்கப் படுதலின்மையின், அதற்கேது உளத்ததுமாற்ற மாமல்லது உரைத்த இவ்விதமாமாறு யாங்ஙனமென்பது.

அல்லதூஉம், தமிழாசிரியத்துவம்வாய்ந்த அகத்தியமாமுனிவ ராதியர்க்கும் யாண்டும் ஆசிரியரென்னும் விதப்புமொழி

உபயோகிக்க மனமின்றிச் சிவஞானசுவாமிகளுக்கே மிகையாக ஆங்காங்கும் அம்மொழி தலைப்பெய்து 'ஆசிரியர் சிவஞானயோகிகள்' எனக் கொண்டாடியதென்னை? இவர் இக்காலத்தவருட் கல்வியிற்சிறக்கினும் முன்னோரொக்க முதுதெய்வீகமிலர். ஆயினும், இவரருளிய நூலுரைகளின் பயிற்சியே நமக்கு நாவலராதலை நல்கிற்றாகலின், அந்நன்றிபாராட்டலாக இவரை யாவரும் ஆசிரியர் என வழங்குமாறு யாங்கும் நிறுவுவாமெனக்கொண்டு, "தானாஅட்டித் தனாதுநிறுப்பு" என்னும் மதம்பட நிறுவுவித்தமையோ? அற்றன்று, இவர் ஞானபானுவாய்த்தோன்றி மலைவகலப் பிறர் பொருட்பெற்றி தேறுமாறு விளக்கியமைபற்றி அவ்வடை நிறுவியதெனின்,—தொல்லாசிரியருள் ஞானபானுக்களாய் இவரினும் பல்கோடிமடங்கு பொருட்பெற்றிவிளக்கியவர் பலருளர்: ஆகலின், வாளா ஆசிரியரென்னாது பேராசிரியர் ஞானாசிரியரென்னும் இத்திறத்த விசேடணமும்பெய்து வழங்குதலோடு, எம்போலியரெல்லாம் சிரமேற்கொண்டு வழிபடுதற்பாலரேயாயினும், இவரைவிதப்புழியல்லது இவரினுயர்ந்தாரையும் விதப்புழி அவர்க்கிறுக்காது இவர்க்குமட்டும் அவ்வவ்வுழியும் அவ்வடையிறுத்தல், ஓதியுநீதியுமொன்றிய மேதாவியரியல்பன்மையாதல் தெளிக.

அன்றியும், திருவிளையாடற்புராணமென்பது சோமசுந்தரக் கடவுளின் அறுபானான்கு அருள்விளையாடல்களைத் தெருட்டுவதாதன்மேலும், திருவருள்பெற்ற பரஞ்சோதிமுனிவரானருளிச்செய்யப்பட்டும் நிலவலின், புராணவகையுள் பெரியபுராணத்திற்கு அடுத்ததாத்ததாகக்கொண்டு, அநேகருச்சித்தலும் பாராயணம்புரிதலும் கண்டுவைத்தும், புராணவிலக்கியமிசைப்புழி அதனையும் சேதுபுராணாதிகளையும் கோயிற்புராணத்துக்குப்பின் னிறுவாது ஆண்டுக் காஞ்சிப்புராணமும் திருத்தணிகைப்புராணமும் நிறுவிப், பிரபுலிங்கலீலையை அவற்றிற்கும்பின்னிறுவி, அதனிறுதியில் ஏனையவற்றோடு தொகுக்கும்

காலும் திருவிளையாடலாதியவற்றைச் சூதசங்கிதைக்குப் பின்னிறுவி, அருணகிரிபுராண மாதியவற்றை அறவேவிடுத்தனர். இதனையொருங்கு ஆராயவுறின், வட புராணங்களருளியோர் வேளாண்மரபினருள் ஆசாரியாபிஷேகம் பெற்றவராகலின், அந்நீர்மையர்க்கும் ஆதீனத்தர்கட்கும் என்றுங் கலாய்த்தற் பழம்பகைமையுடைமையும், பிரபுலிங்கலீலையருளியோர் வீரசைவ மாகேசுரராதலும் நோக்கியேபோலும். அற்றன்று, அங்ஙனம் முன்னும்பின்னும் வைத்தது சூதசங்கிதை மூலபுராண மொழிபெயர்ப்பும் பிரபுலிங்கலீலை சிவாவதாரமுடையவர் சரித்திரமுமாகலினெனின்,—இவ்வரம்பினுஞ் சேறலின்றி இவ்வகுப்பில் முன்னிறுவிய பிரமோத்தரகாண்டம் காசிகாண்டங்களைக் கற்குநான்முறைவகுப்பில் திருவிளையாடற்குப்பின்னும் ஆண்டும் காஞ்சிப்புராணமும் திருத்தணிகைப்புராணமுமாத்திரம் தம்மபிமானங் குன்றுவாறு முன்னும் இருவிக்கொண்டது எவன்? அது தவறேயாம்: அருணகிரிபுராணம் திருவாதவூரர்புராணமாதிய காட்டாதொழிந்தமை தொடங்கியநூல் விரிவஞ்சியாகலின் இது தவறன்றேயெனின், — அந்நூலிற் பயன்பாடிலவாகத் தாம்விரித்தனவகற்றிப் பெரியர் நூல்களாய்ப் பயன்பாடுளவாகும் இவ்வரியவற்றைப் பெயரளவானேனும் புகுவிப்பதன்றோ பெருமை.

இதன்றியும், வாயுசங்கிதை யியற்றியது குலசேகரவரகுணராமபாண்டியனெனவும், பிரமோத்தரகாண்டமியற்றியது வரதுங்கராமபாண்டியனெனவுங் குறித்துச் சிறிதுவிதந்து, காசிகாண்டம் விதக்குங்கால், அதிவீரராமபாண்டியர்பெயரும் அறிவியாதொழிந்தனர். இக்காண்டமியற்றியாரை இன்னரென மரபறியப்படாதாருள் ஒருவராக்கினர்கொலோ? மற்றும், அவரருளிய கூர்மபுராணமும் குலசேகரபாண்டியரருளிய இலிங்கபுராணமும் மூலபுராணங்களின் மொழிபெயர்ப்பேயாகவும் சற்றும் விதந்திலர். வாயுசங்கிதையாதிய அருளியாரைப் பா

ண்டியரென்பதற்கும் மனவொருமைப்பாடின்றிப் பாண்டிய னென்ற இவர் அவர்பெருமையும் அவர் நூற்பெருமையுந் தெரிக்க எங்ஙன மனவெழுச்சி பெறுவர். அவர், அரசராகலானே புலவரினும் தாழ்ந்தாராய்விடுவரோ? தம்மனப் போக்கின் வழங்காது, அவரவர்க்குரிய அடைக்கிளவியோடு எப்பொருளெச்சொலி னெவ்வாறுயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதலன்றோ மரபு. அன்னுரை அங்ஙனமவமதித்து அடுத்தபாராவிலும் 'ஆசிரியர்சிவஞானயோகிகள், என்னக் கிளந்தனர். இத்துணையுங் கூறியவாற்றானும் பிறவாற்றானுந் தேர்ந்துணரின், ஏனையர் நூலுரைகளினுஞ் சிவஞானயோகிகள் நூலுரைகளே சிறந்தவெனவியந்து ஒருநூல்வெளியிடின் அது போதப் பயப்பாடின்மை நோக்கித் தெள்ளியோர் கையாளாமை மேலும் விலைப்பாடு மின்றுமென்பதுட்கொண்டு அதுபுலனுகாதபடி பிறநூலுரைகளையும் புனைந்துரைத்தாங் கபிநயித்துத் தங்கருத்தை நுணுக்கமாக நாட்டிப் போந்தனரென்பதூஉம், அங்ஙனம் போந்தாரேனும் அவ்வஞ்சகச்சூழ்ச்சி ஆங்காங்கும் அதில் வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதினறியப் புலனுகிக் கிடத்தலின் அந்நூல் பொதுமையில் திராவிடப்பிரகாசிகை யெனப் பெயர்பெறுவ தொல்லாதென்பதூஉம், நுண்மாணுழைபுல முடையார்க்கு எளிதுவிளங்கா தொழியாதென்க.

மேலும், குமரகுருபரசுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞானசுவாமிகள் கச்சியப்பசுவாமிக ளாதியோர் பிரபந்தங்களை யிசைத்தவழி, "இவை, தொல்காப்பிய வியற்றமிழிலக்கியமாய்ச் சங்கச்செய்யுட்பிரயோகம் யாண்டும்பயின்று சொல்லணிபொருளணி துறுமிவிளக்கும் பிரபந்தங்களாம்" எனக் கூறி, அவ்வளவினமையாது விகற்பித்துக், குமரகுருபரசுவாமிகள் சிவஞானசுவாமிகள் பிரபந்தங்களைமட்டும் "சைவசித்தாந்த நுண்பொருள் விளக்குவ" என்றார். ஏனைய எப்பொருள் விளக்குவவெனத் துணிந்தனரோ! சிவப்பிரகாச சுவா

மிகணிமித்தம் கச்சியப்பசுவாமிகளையும் ஈண்டை அறக்கைத் தொழிந்தனரோ! தம்மாதீனத்திலேயே பிரதம நமச்சிவாய தேசிகர் சைவகுரவரும் துவிதீய சிவப்பிரகாசதேசிகர் வீர சைவ குரவருமாகி நிலவிவிளக்கிய இருதிறச்சைவ வொற்றுமையை யுற்றுணராது, தாம் ஆதீனத்திலே நூதனப் பிரவேசத்தி னெய்திய பக்குவ முதிர்வும் தந்நூதன சைவசித்தாந்த நூற் றெளிவும் நுணுகிக் காட்டினர். இவ்வித மெழுதத் துணிந்தவர் வீரசைவசமயப் பிரவேசம்பற்றியே துவிதீயர் விலக்கப் பட்டனரென அபக்குவர்க்குபதேசித்த அறியாமையை ஆதி மூர்த்திக்கு மேற்றுமாறு மூலத்திலேயே வாய்வைக்கவும் துணிவரன்றே? அச்சோ! புதுமை. தம்மாதீனத்தருக்கும் தருமையாதீனத்தருக்கும் சைவசித்தாந்தத்துட் சிற்சில கொள்கைபற்றி முரண்படுத லென்றுமுளதாதல் தாமச்சிட்ட சித்தாந்தமரபு கண்டன கண்டனத்தானுந் தேர்ந்தும், ஈண்டுக் குமரகுருபரசுவாமிகளைமட்டுந் தழீஇயமை அப்பெரியார் பிரபந்த அருமைகண்டன்று. சிவஞானசுவாமிகள் பிரபந்தங்களை மாத்திரம் சித்தாந்தநுண்பொருள் விளக்குவவெனின் பிறர் அசதியாடல் புரிவரென்பதற் கஞ்சியேயாம். உள்ளவாறுயின் சித்தாந்த நுண்பொருள் விளக்கும் பிறவற்றையும் நடுநின்று விதப்பரன்றே? இதுகிடக்க.

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை - நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே - கேட்போர் பயனொ டாயெண் பொருளும் - வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே" என்னுந் தொல்லாசிரியர் சூத்திரத்துள் யாப்பென்பதற்கு, இவையாய்ந்த பின்னர் இந்நூல் கேட்கற்பாற் றென்னும் இயைபெனவும், கேட்போரென்பதற்கு, இவையாய்ந்தோர் இதுகேட்டற்குரிய அதிகாரிகளெனவும் பொருள்கொள்ளாது, தொகுத்தன்முதலிய வழியின் வகையினையும் நூலரங்கேறு மவைக்களத்துக் கேட்டாரையும் அவற்றிற்கு முறையேகொண்டமை, சிவஞான

சுவாமிகள் இறையனார் களவியலுரையிற் கண்டுவைத்தும், இப் பொருள்கள் நக்கீரனார் கண்டவைதாமோ! அன்றிப் பிறவாக, அவை இற்றைஞான்று பிரதிகளி லிங்ஙனம் பிறழ்ந்தனவோ! இப்பிறழ்ச்சியை உண்மையெனக்கொண்டு உரையாசிரியரை யுள்ளிட்டோர் தாமுமிங்ஙன முரைகூறினரோ! அறியகிற்றி லம். இவற்றைக் களவியலுரைபற்றிக் கிளைவான்புகிற் பற்பல விபரீதத்திற் கேதுவாமாகலின் இது நமக்கியல்பன்றெனத் தேர்ந்து, தொல்காப்பியப் பாயிரவிருத்தியுள் நக்கீரநாயனாரைச் சுட்டாது உரையாசிரியரை யுள்ளிட்டாரைச்சுட்டி மறுத்து, "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ - தஞ்ச லறிவார் தொழில்." என்னுந் தெய்வத்திருக்குறளின் பொருட்சிந்தனையானனைக; இவர் அதுகுறியாது அந்நக்கீரநாயனார்க்கு எதிரீடாய்நின்று அப்பொருள்கள் முக்குணமயக்கான் முறைபிறழ்ந் துரைத்த பொருளென்பாராகிச் சிலவரைந்தனர்.

அவற்றை ஈண்டுத் தொகுத்துரைக்குதும்:—"தெய்வச்சங் கப் பலகைமேலிரீஇக் கடைச்சங்கத்தலைமைபூண்ட நக்கீரனார் முக்குணமயக்கான் அங்ஙனமுறைமறந்துரைத்தாரென்றல் வே தவழக்கொடு மான்றோர்வழக்கொடு மாறுறுமாலெனின்,—அது வேதவழக்கொடு மான்றோர்வழக்கொடு மாறுறுமாறு காட்டு தும். தெய்வச்சங்கப் பலகைமேலிருந்து தமிழாராய்ந்தார் கடைச்சங்கப்புலவர் நக்கீரனார்முதலாற்பத்தொன்பதின்மரு ளர். அவரெல்லா முக்குணமயக்க முற்றக்கடந்து மெய்யுணர் வா லுயர்ந்தாரென்ற னிரம்பாது. என்னை? அவர் 'பாண்டி யன் வேண்டுகோளாற் களவியற்பொருடனித்தனிகண்டு, தாந் தாங்கண்டதே மெய்யுரையென்று சிலநாளெல்லா மாறுடிநு, ரென்றும், பின்னர் 'ஆலவாயிலழனிறக்கடவுள்பால் வரங்கிடந்து, உப்பூரிகுடிகிழார்மகனுவா னுருத்திரசன்மனைப்பெற்று, அவன்றன்னான் மெய்யுரைகண்டு தேறினு' ரென்றும், ஆலவாய் மான்மியத்தும், களவியலுரைமுகத்துங் கூறுதலினென்க. அற்

றாயினும், 'உருத்திரசன்மனார் நக்கீரனார்களவியற்பொருள் கே
ட்புழிப் பதந்தோறும் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்
பவிருந்தார். சங்கப்புலவ ரார்ப்பெடுத்து மெய்யுரைபெற்று
மின்றாற்கென்றார்'' என்று ஆண்டுக்கூறுதலின் நக்கீரனார் முக்
குணமயக்க முற்றக்கடந்து களவியற்பொருள் கண்டாரெனக்
கொள்ளாமோவெனின்,—கொள்ளாம். என்னை ? உருத்திர
சன்மனார் நக்கீரனாருரை அவ்வாறு கேட்டாரென்றதனான்
ஏனைப்புலவரெல்லாங்கண்ட களவியற்பொருள்களைநோக்க நக்
கீரனார்கண்ட களவியற்பொருள் சிறந்ததென்னும் பொருள்
போதருதலன்றி அவர்முழுதுணர்ந்து அதுசெய்தாரென்பது
அதனாற்பெறப்படாமையின்.'' என்பதும் இன்னும் யாம் மேழ
தனித்தனி அனுவதிப்பனவும் இவர்வரைந்தவைகளேயாம்.

இவ்விடயம் மிகச்சுருக்கி விளம்பற்பாலதேயாகவும் பிஷ்ட
பேஷணநியாயத்திற் குதாரணமாக விளம்பியவற்றையே மே
ன்மேல் வாளாங்குவிளம்பிப் பெரியர்சிந்தை மிகப்பேசினர்.
தம்மிலக்கணமரபியலில் "நுணுகிப் புடைபடவொற்றி ஆரா
ய்ந்து மெய்ப்பொருள் காணமாட்டாது அப்பேரறிவாளர்ப்
பழித்து உய்தியில்குற்ற முற்றனரென்க. இவ்வாற்றாற் 'புன்
றொழிற்கயவர் தமதறியாமை புலமையாய்ப் பரிணமித்ததுவே'
என்னுமூதுரையை அவர் புதுக்குமாறுணர்க.'' என்று தக்கா
ரொருவரைச் சுட்டியுரைத்திருந்தும், தங்கதி ஈண்டுக் கவனி
யாதொழிந்தது சாலவற்புதம். சில்லாண்டுகட்கு முன்னர்த்
தருமையாதீன சிவஞானதேசிக சுவாமிகளருளிய முத்துக்
குமாரசுவாமி திருவருட்பாவின் ஏழாஞ்செய்யுளில் ஓரடிகுறை
ந்தபிரதியே தமக்குக்கிடைக்க அதனை அவ்வாறேபதித்து
அதில், "அநுபூதிமான்கள் வாக்கிலுள்ள குறைபாட்டைப் பூர்
த்திசெய்தற்கு நாயடியேன் யாவன்?'' என்று அப்பதிகவளவி
னும் அத்துணையஞ்சியொழுகிய இவர் இந்நக்கீரநாயனாருரை
யையு மறுப்பான் இத்துணைத் துணிந்தெழுந்தாராயினமைக்குக்

காரணமற்றியாதோ தெளியகில்லேம். யாதாயினுமாக. அது பற்றிய ஆராய்ச்சி, எற்றிற்கு? பெரியர்சிந்தையே பெருகிய இதனைப் பரிகரிப்பா னெடுத்தோதலும் எமக்கேதமாம். அது குறியாது பரிகரிப்பினும், "பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல் - மக்கட் பதடி யெனல்" எனத் தமிழோத்துடையா ராணைதருதலின் அறிஞரான் எள்ளற்பாடெய்தலன்றிக் கொள்ளற்பாடெய்தாமை யொருதலையாம். இஃது மெய்தினு மெய்துக. இவரங்ஙனங்குறித்தது திருவிளையாடன்முறையுங் கேட்டறியாமையினேயென்பது காட்டல்வேண்டுமென்றொரு வேட்கைமேலிட்டெழுதலின் அதனை யீங்கு நாட்டிச்செல்வாம்.

நக்கீரனார் "முக்குணமயக்க முற்றக்கடிதற்கு முன்னர்க் கண்டது இறையனார்களவியலுரை"யென்றார். முக்குணமயக்க முற்றக்கடிந்த தெப்பொழுது? இதுகொண்டே தங்கோள் சாதிப்பான் புக்காராகலின் இக்காலத் தின்னவாயிலால் இவ்வாறு கடிந்தாரென்பதும் அஃதின்னநூலாற் பெறப்பட்டதென்பதும் இனிதுவிளக்கவேண்டுவது முக்கியமேயாகவும் விளக்காததென்னை? கடிந்தது அகத்தியமாமுனிவரால் இலக்கணோபதேசம்பெற்ற பின்னரென்பரேல், "கற்ற கீரனும் பின்புதான் முன்செய்த கவிகள் - முற்று மாய்ந்துசொல் வழுக்களும் வழாநிலை முடிபு - முற்று நோக்கினன்." எனத் திருவிளையாடற்புராணத்து ளுறுதலான் இலக்கணோபதேசம் பெற்றபின், தங்கவியிலுள்ள வழுக்களெல்லாங் கண்டுகளைந்தவழி, அக்களவியற்பொருள்களுள்ளும் வழுவிருப்பின் களைந்திருப்பரே. அவை அவர்க்கு விளங்காதொழிந்தபோலுமெனின்,— ஆலவாயண்ணலார் "இருந்த மாதவச் செல்வனை யெதிர்வர நோக்கி - யருந்த வாவிவற் கியற்றமி ழமைந்தில வெம்பாற் - றெரிந்த நீயதை யறிறபத் தெருட்டென" அங்ஙனமே துளக்கறவிளக்கித் தெருட்டியும், எளிய வவ்விருபதப் பொருள்கள் விளங்கப்பெற்றிலராயின். கடைச்சங்கத் தமிழ்க்கலைமைப் பல

மைநடாத்திய அவர்க்கும், அவர்க்குக்கற்பித்தவராயும் தமிழைவழிப்படுத்திய குரவராயுமுள்ள அகத்தியமாமுனிவர்க்கும், அவர்க்கு அரிறபக்கற்பிப்பான்பணித்த தமிழ்முதற்குரவராகிய ஆலவாயண்ணலுக்கும் ஈது என்றுமொருவாத இழுக்காமன்றேவென்க.

அற்றன்று, "உருத்திரசன்மனார் அவ்வாறுகேட்டாரென்றதனான் ஏனையர்கண்ட பொருளினும் சிறந்ததென்னும்பொருள் போதருதலன்றி அவர்முழுதுணர்ந்து செய்தாரென்பது பெறப்படவில்லை" என யாங்காட்டினுமாகலின், அப்பதப்பொருள்களை நுனியாது, மயங்கி அவற்றிற்குப் பிறிதுபொருள்கூற, உருத்திரசன்மனார் பிறசொற்பொருள்களிற்பெற்ற ஆர்வமேலீட்டால் அவை குறியாராயினாரென்பதே கருத்தெனின்,— அங்ஙனமாயின், "பொருள்கேட்புழி உருத்திரசன்மனார் பதந்தொறுங் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப விருந்தார்" என்னு மவ்வுரைமுகத்தும், "மகிழ்ந்தான்சிலர் சொல்லாழ்ச்சியை மகிழ்ந்தான்சிலர் பொருளை - யிகழ்ந்தான்சிலர் சொல்வைப்பினை யிகழ்ந்தான்சிலர் பொருளைப் - புகழ்ந்தான்சிலர் சொல்லின்பமும் பொருளின்பமு மொருங்கே - திகழ்ந்தான்சிலர் சொற்றிண்மையும் பொருட்டிண்மையுந் தேர்ந்தே. இத்தன்மைய னிக்கலை வல்லோர்தமி ழெல்லாஞ் - சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன்றருள் சேரன் - முத்தண்டமிழ் கபிலன்றமிழ் பரணன்றமிழ் மூன்று - மத்தன்மைய னறியுந்தொறு மறியுந்தொறு மெல்லாம். நுழைந்தான் பொரு டொறுஞ் சொற்றொறு நுண்மதுஞ்சுவை யுண்டே - தழைந்தானுடல் புலனைந்தினுந் தனித்தான்சிரம் பனித்தான் - குழைந்தான் விழிவழிவேலையுட் குளித்தான்றனை யளித்தான் - விழைந்தான்புரி தவப்பேற்றினை விளைத்தான்களி திளைத்தான்" என்னுந் திருவிளையாடற் புராணத்தும் முறையே, பதந்தொறுமென்றும், நுழைந்தான் பொருடொறுஞ் சொற்றொறுமென்றும், சொற்

பொருளெஞ்சாமைப்பட இசைக்கப்பட மாட்டாவாகலானும், செய்யுட்கலக நிவர்த்தித்தவழியே களவியலுரைக் கலகமும் நிவர்த்தித்ததென்பாராய்த் திருவிளையாடற்புராணத்தார் அக்களவியலுரைமுகத் துரைத்தாங்கே தாமும் சரித்திர மாறுகொளா துரைத்தலின், சங்கத்தார் கலகந்தீர்த்தது இருமுறையன்று, ஒருமுறையே; வேறாயின், அவர் ஏனையபோல இவற்றையும் தனித்தனி விதந்து கிளப்பரன்றே? எனக்கொள்ளக் கிடத்தலானும், சிவாஞ்ஞைப்படி சங்கத்தார்கலகந்தீரச் சொல்லாழமும் பொருளாழமும் துலைநாவெனத் தூக்கியுரைத்த அவ்வுருத்திரசன்மனாரும் முருகக்கடவுள் கூறாயிருந்தும், முழுதுணர்ந்துசெய்யாத களவியலின் அப்பதப்பொருள்கள் கேட்புழி வெறுது ஒருபாற்கோடிக்கேட்டுச், சமனிலை நில்லாராயினு மொன்றுந் தவறுபெரிதாமாகலானும் அதுகருத்தன்றென்பது.

ஆகவே, சிவஞானசுவாமிகள் நக்கீரனாருரையில் தமக்குத் துணிவுதோன்றாமையின் உரையாசிரியரை யுள்ளிட்டோரைச் சுட்டி நுவன்றகல; இவர் களவியலி னரும்பொருள் கண்டார் மானக் குதூகலித்து, “இவற்றுனே யாப்புக் கேட்போனென்பவற்றிற்கு நக்கீரனாருரைத்தபொருள் பொருந்தாவெனமறுத்துச் சிவஞானயோகிகள் வேறுரைவகுத்தது பொருத்தமுடைத்தென்பதூஉம், அது வேதவழக்கொடு மான்றோர்வழக்கொடு மிகவியைவதன்றி மாறுறுமாறில்லையென்பதூஉம் தெற்றெனவுணர்க” என வெற்றெனக் கிளந்தது பேதுறலினிசைத்ததாமல்லது ஓதுறலினிசைத்ததாகாதென்க. நக்கீரனாரைச்சுட்டியே மறுத்ததெனின்,—அவர்பெயர் காட்டா தொழிந்தமைக்குக் காரணமென்னென்பதூஉம், அஃது ஆண்டு எதனாற் பெறப்பட்டதென்பதூஉம் வினாவிமறுக்க.

மற்றும், “நக்கீரனார் கலகந்தீர்ந்து, முக்குணங்களையுங்கடந்து இறைவனருள்பெற்றுடையராய பின் திருமுருகாற்றுப்

படைமுதலியன அருளிச்செய்யப்பட்டனவாகலின் ஆன்றோர் அவைதம்மையும் நாயன்மார்திருவாக்குகளோ டொப்பப் பதினோராந் திருமுறையிற் கோத்துப் போற்றுவாராயினர்" என்றும், "அற்றாகலினன்றே, நம்பியாரூரர்பெருமானார் 'பொய்யடிமையில்லாத புலவர்க்குமடியேன்' எனத் திருத்தொண்டத்தொகைச்சுருதியுள் சேவைசெய்வா ராயினரூஉம்" என்றும் நாட்டினார். சேவைசெயப்பெற்றதும் திருமுருகாற்றுப்படை யருளியதும் பின்னரேயாயினும், அத்திருமுறையிற் கோக்கப்பட்டுள்ள மற்றைய கோபப்பிரசாதம் பெருந்தேவபாணி திருவெழுகூற்றிருக்கைமுதலியன அருளியது ஆலவாயண்ண னுதல் விழித் தீத்தாக்கப் பொற்றாமரைத்தீர்த்தத்திற் போயமிழ்ந்து அப்பெருமானும் கரையேற்றுவிக்கப் பெற்றவுடனாகலின் பின்னாவதெங்ஙனம்? கீரனைக்கரையேற்றியது ஐம்பத்துமூன்றாவதும், கீரனுக்கிலக்கண முபதேசித்தது ஐம்பத்துநான்காவதும், சங்கத்தார் கலகந்தீர்த்தது ஐம்பத்தைந்தாவதுமாகிய திருவிளையாடல்களேயாகவும், முன்பின்மயங்க வரைந்ததென்கொலோ? தாந்தெரித்ததே முறையென்பரேல், அஃதெந்நூலிற் கண்டது? திருமுறையிலக்கியம் வகுப்புழிப் "புல்லறிவாளர்சிலர் திருமுறைவரம்பழித்துக் கொள்வாய்கிரயத்திற் காளாவர்" என்றார். என்ற தாம் இங்ஙனம் வரம்பழித்தலும் அக்கதிசித்தித்தற் கேதுவாதல் சிந்தியாததெவன்?

வேறும், "நக்கீரனார் மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய்க் களவியற்பொருள் கண்டாரென்பாரை அவ்வாறு மெய்யுணர்வுடையராயினார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரோடு சங்கப்பலகை யொக்கவீற்றிருக்கப்பெறாது ஏனைப்புலவரோ டிழிந்த தென்னையோவென்று கடாவிமறுக்க" எனத் தம்மாட்டு மதிநுட்பநூலொடுண்மை வெளிப்படுத்தார். படுப்பின், 'ஆளுடையபிள்ளையாரும் ஆளுடையவரசும் மெய்யுணர்வின்முற்றுப்பேறுடையரேயாகவும், பிள்ளையார் சிவிகையிவர்ந்துசெல்ல

அரசு ஏனைத்தொண்டரோ டொக்கநடந்து சென்றதேவன் கொல்? திருமறைக்காட்டிலே மறைகளாற் பூட்டப்பட்ட திருக் கதவு அரசுக்குப் பத்தாவது திருப்பாட்டிற்றிறக்கப் பிள்ளை யாருக்கு முதற்றிருப்பாட்டிலேயே அடைத்ததேவன்கொல்? திருவாய்மூரிலே பெருமான் அரசுக்கு நேரே தரிசனமளியாது பிள்ளையாருக்களித்து அவராற் றம்மைத் தரிசிப்பித்ததேவன் கொல்? திருவீழிமிழலையிலே அரசுக்கு வாசிபடாக்காசீந்து பிள்ளையாருக்கு வாசிபடுங் காசீந்ததேவன்கொல்? ஒத்தநட் பினராயினார்மாட்டும் இத்திறவேறுபாடுகள் எத்துணையோவுள வே: இவை முன்னாததேவனெனப் பிறர்கடாவி னங்கோண மறுப்பரேயெனத் தாம் இனைத்துணையுநாடாத தென்னையோ? தகுதிக்கியைய அவரவரையுயர்த்தலுந் தாழ்த்தலும் உடையான் றிருவுளப்பாங்கன்றோ? இதனானே மெய்யுணர்வுடையரல்லரா தல் யாண்டையது? ஆளுடையஅரசு கடைச்சங்கமிரீஇய முட த்திருமாறன்காலத்து விளங்கியவரும் நாயனார் கடைச்சங்கத் திறுவாயின் அதனைநடாத்திய உக்கிரப்பெருவழுதி காலத்து விளங்கியவருமாகலின் "கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வ னேனே" என்று அவ்வாளுடைய வரசருளியதையே நாயனார், "கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" என்று மேற்கோளாகக் கொண் டனரெனத் திருக்குறள்விதப்புழியுரைத்த இவர், இந்நாயனா ராலும் இங்ஙனம் பாராட்டுந் தரத்தரெனப்பெற்ற அந்நாயனா ரியல்பை நன்குதேர்ந்துகொள்ளாமை நனிவிசித்திரம்.

அற்றேலஃதாக. நக்கீரனார் சங்கத்தலைவராயிருந்தும் நாயனா ரோடு ஒருங்கிருப்புப்பெருமைக்குக் காரணந்தான் மற்றென் னெனின்,--முன்னர்க் களவியலுரைமுதலியனபற்றிச் சங்கத் தார்தம்முட் கலகநேர்ந்துழி, "இவ்வூர் உருத்திரசன்மனென் பான் குமாரதெய்வம். அவனை ஆசனமேலிரீஇக் கீழிருந்துரைத் துண்மை தெளிக" என்று ஆலவாயண்ணலருளியவாறு இந்நக் கீரனாரும் அவரை வேண்டிக்கொடுபோந்து வெளியதுஉடீஇ

வெண்பூச்சூட்டி வெண்சாந்தணிந்து கன்மாப் பலகையேற்றிக் கீழிருந்துரைத்துத் தம்முரையாதிகளில் வழுவின்மைகேட்டுத் தெளிந்தவரேயாக, அந்நாயனார் ஆலவாயண்ணலருளால் அம்பரத்தெழுந்த அசரீரியின்படி அத்தகையகுமாரதெய்வத்தோடு உத்தரவேத மரங்கேற்றுழி ஒக்கவீற்றிருப்புப்பேறு பெற்றாராகலின், அவ்விருவரும் உடனிருப்புழித் தாம் அவரோடு ஒருங்கிருப்புப் பெறாராயினாரென்பது.

இனி * "யோகியுண்மையிற் பிரமாணம் யாது? கூறுதும்: பரமாணுக்கள் ஒருவற்குக்காட்சி, பிரமேயமாதலின், குடம்போல; யாவன் பரமாணுவைக் காண்பான் அவனே யோகி" என்பது நியாயநூற்றுணிபாகலின் சிவஞானயோகிகள் கண்களுக்குக் கனாதுற்கிலக்காகாதுள்ளவைகளையும் கண்டுகளைதலாற்றின் யாம் பூண்டுகொண்ட சபாபதிநாவல யோகிபட்டம் நிலைத்துவிடுமென்ப துட்கொண்டோ? அல்லது தாம் யோகியாதலின் யோகப்பெருமையானளந்து சிவஞானயோகிகளுளக்கருத் தின்னதென்பது துணிந்து அதனை எங்கு காட்டல்வேண்டியோ? இதிற் பிரவேசித்தது. ஓகோ! "அத்த ராகிய வங்கண ரன்பரை-யித்த லத்தி லிகழ்ந்தியம் புன்முறை - வைத்த நாவை வலித்தரி சத்தியார்" அக்காலத்திருந்தாங்கு இக்காலத்தின்மையாற் சிவனடியாரை வைதுதிரிவார் உலகிற்பலராக இவ்வியோகியாரொருவர் தீபத்தினின்று இகழப் பாரதியிற்போந்து மாயாவாதியராய் இவ்வாறு வாதிப்பது நாடின் நனியிரும்பூதுடைத்து.

இன்னும், தம்பிரகாசிகையெழுவாயில் சுப்பிரமணியதேசிகசுவாமிகள் அருளுபதேசம்பெற்ற சபாபதிநாவலரவர்களென கல்லெழுத்தாற்பதித்து, இறுவாயில் ஆசிரியர்பெ[illegible] பிரமணியதேசிகனென முந்தையளவிற் குறைத்தலோடு ஒருமையீறாகவும், தம்பெயரைமட்டும் சபாபதிநாவலரெனப் பன்

---

* தருக்கபரிபாஷை.

மையீறாகவும் கோணவெழுத்தாற் பதித்துளர். அங்ஙனம்பதித்தமை முன்னர்க் குருவின்விஞ்சாமையும் அருளுபதேசத்தாற் பின்னர் அவருமடங்கத் தாம் குருவின்விஞ்சிய சீடராயினமையும் காட்டுதற்கோ? தாம்விஞ்சின் விஞ்சுக. ஆசிரியர்பெயரைக் குறைக்கவேண்டிய தில்லையே? குறைத்தமையாஞே இறுவாயில் சபாபதிநாவலரவர்களெனும் பெயரினும் அவர்களெனுமொழிதவிர்ந்து இவர்பெயர்க்குக் குறைவெய்துவித்தது? அங்ஙனமன்று: எழுவாய்க்கடிதம் இறுவாயிற்பதிப்பதும் வழக்கமாதலின் அங்ஙனம்பதித்தமையின் இக்கடிதங்களில் முற்பிற்பாடும், வாக்கியங்களை எழுவாயிற்பெருக்கியும் இறுவாயிற்சுருக்கியும் பதித்ததாகலின் இதுகுறித்தவழி இவர்பெயர்க்குக்குறைவும், ஒருமையீறாகநேர்ந்தமை அச்சுப்பிழையாகலின் திருத்தங்கொண்டவழி ஆசிரியர்பெயர்க்குக்குறைவும் இன்றாமெனக்கோடுமாலெனின்,— இங்ஙனங்கோடல் எற்றே! அற்றாயின், அந்நூலில் இவ்வண்மைய முரண்பாட்டிற்கேதுவாகிய நூனுதிக எழுத்துச்சொற்பொருட்பிழைகள் தவட்டலவுளவே! இத்தகையபிழைகள் எம்போலியர்கண்களுக்குப் புலனாகாது தணப்பதியல்பு. அச்சியர்நாலுரைகளில் வழுவாகப் பிறர்காணுதவெல்லாம் காட்சியாகப்பெறும் இவ்வியோகியார்கண்களுக்கு இவ்வாறு இவர் நூலிலுள்ளனமாத்திரம் காட்சியாகாதொழிவது என்னே! இஃதொரு அரிய தவச்சித்தியோ! இச்சித்தி மற்றெவர்க்கு வாய்க்கும். இதுநிற்க.

சிவபுராணாதிகளையும் திருப்புகழூரிலைத்தையும் ஆதாரமாகக்கொண்டு ஆளுடையபிள்ளையார் சரித்திரமெழுதப்பட்டவுளில் அவதாரப்பெருமையை ரென்னார்க்கும் அவ்வாசிரியரல் குணைளாதுந்துதியாதுக்களையார் மவ்வாரக்கும் இதுவத்திறியவாதம் பண்டையதாகவும் பிற்பகுதியருட்பட்டுச்சாதிசுட்புர்காரிவர் "அருணகிரியார்முதலியோர் திருப்புகழூரிவைத்தில் ஆளுடையபிள்ளையார் அற்புதச்செயல்களை அருமுக்கட்டயுள் செயலாக வோதி

யதூஉம், பிள்ளையார் உமைமுலைப்பாலுண்டு அறுமுககடவுள திருவருளமிச முறுதல்பற்றி யாகலின், அஃது, வைரவக்கட வுள் வீரபத்திரக்கடவுண்முதலியோ ரியற்றியருளிய அயன் றலைகோடல் தக்கன்வேள்விகர்த்தன் முதலிய செயல்களை அவர் சிவபிரானருளமிச முறுதல்பற்றி அம்முதல்வன் செயலாக வோதுவதுபோல்வதோ ருபசாரவழக்கென்று துணிக. விசா லாக்கன் தாணு சங்காரவுருத்திரரென்னும் அமிசவுருத்திரர் குணிருத்திரக் கடவுட்குரிய குறிகுணங்களான் அங்ஙனம் விசேடிக்கப்படினும் அக்கடவுளாகாதவாறுபோலவும் குணிருத் திரக்கடவுள் துரியமுதற்கடவுளான பரமசிவனுக்குரிய குறி குணங்களான் அங்ஙனம் விசேடிக்கப்படினும் அம்முதல்வ னாகாதவாறுபோலவும், ஆளுடைய பிள்ளையார் உருத்திரசன்ம னர் உக்கிரபாண்டிய ரென்னும் அமிசசுப்பிரமணியர் பரசுப் பிரமணியக்கடவுட்குரிய குறிகுணங்களான் அங்ஙனம் விசே டிக்கப்படினும் அச்சிவசுப்பிரமணியக்கடவு ளாகாரென்பது தெற்றெனவுணர்ந்துகொள்க.'' என்றனர்.

இஃதொக்குமன் : ஆயினும், "சிவனெனவே தேசிகனை யன் பரையுஞ் சிந்தி - யவனையிவ ராகநினை யல். சிவனெனவே தேவ ரையுஞ் சிந்தி சிவனை - யவரெனக்கண் டார்நிரயத் தார். அரை யனெனக் காண்ப ரமைச்சை யமைச்சா - வரையனைக்கண் டாற்றுயர மாம்'' என்பது சித்தாந்தமாகலின், ஆளுடைய பிள்ளையார் துதியில் அவரைச் சுப்பிரமணியக் கடவுட்குரிய குறிகுணங்களான் விசேடிக்கலாமல்லது, சுப்பிரமணியக்கடவு டுதியில் அவரைப் பிள்ளையார்க்குரிய குறிகுணங்களான் விசே டித்தலியையுமோ ? விசேடித்தது வைரவக்கடவு ளாதியோர் செயலைச் சிவபெருமான் மீதேற்றிய வாறுபோலெனின், இம் மூன்ண் ஆண்டைக்குமுளதாகலின் அதற்குத்தான் போக்கென் னை ? வைரவக்கடவுளும் வீரபத்திரக்கடவுளும் சிவாமிசமுடைய ரெனப்படினும், சிவமூர்த்த மிருபத்தைந்தனுள் வைத்தெண்

ணப்படும் ஒற்றுமை யுருவத்தராகலின், அவர்செயல் அக்கட வுள் செயலாக விசேடித்தலமையுமேயெனின்,— இக்கூற்று மிகவினிது : துருவாசமுனிவராதியரும் சிவாமிசமுடையரென ப்படினும் அவர்செயல்களைச் சிவபெருமான் மீதேற்றாது வைர வக்கடவுளாதியோர் செயல்களைமட்டுமே ஏற்றித்துதிக்கும் சை வசமயிகட்கும், வியாசமுனிவராதியரும் திருமாலமிசமுடைய ரெனப்படினும் அவர்செயல்களை அத்திருமாலின்மீதேற்றாது தசாவதாரமூர்த்திகளின் செயல்களைமட்டுமே ஏற்றித்துதிக்கும் வைணவசமயிகட்கும், இவ்வாறே அவதாரப்பெருமையர் செ யல்களைமட்டுமே மூலமூர்த்திமீதேற்றித் துதிக்கும் மற்றேனைச் சமயிகட்கும் ஈதொத்த துணிபேயாகலின் ஆளுடையபிள்ளை யாரையும் இங்ஙனமே அறுமுகக்கடவுளுருவெனி னமையுமல் லது சாமானிய அமிசமாத்திரமுடையரெனின் இவர்செயல் அக்கடவுள்செயலாக விசேடித்தலமையாதே. இங்ஙனம் ஆச ங்கிக்கின் இதில் அரவத்தைப்படப் பற்பல ஆசங்கைகள் எழாநிற்குமாகலின் அங்ஙனம் ஆசங்கை யெழாவாறு ஆளுடை யபிள்ளையார் இத்திறவுருவொற்றுமை யுடையராகலின் அது பற்றி அவர்செயல் அறுமுகக்கடவுள்செயலாகவோதப்பட்டதெ ன்பது நன்குவிளங்கத் தேற்றுவதன்றோ தடைவிடைகளாற் பொருள்சாதிப்பார்க் கியல்பாவது. அவ்வாறு சாதியாது சா தியும் நிக்கிரகத்தானமும் தம்பால்நிகழத் தணந்தது, பிள்ளை யாரை இவ்வாற்றான் மூலமூர்த்தியோடு ஒருவாறு அபேத வொற்றுமைமொழியின் சுற்றிப்போயும் சுங்கத்துறைச் சேர் ந்தமைகுறிக்கும் கட்டகுடிகா நியாயத்திற்கு இஃதொரு காட் டாய் முடியுமென்பதாறோ அறிவுபிறிதாறோ அறியகிற்றிலம். அன்றோ! தங்கருத்துகாட்டுவான் "ஆசிரியர் சிவஞான யோ கிகளுக்கும் இதுவேகருத்து" என யோகிகளை ஈங்கும் விசே டித்தவர் திருப்புகழைப்பாராட்டுழி விதப்புமொழியின்றி அரு ணகிரிநாதரென உரைத்தாங்கேனும் உரையாது ஈண்டு அத்தி

ருப்புகழாசிரியரை அருணகிரியாரென் றறைந்தொழிந்தது தங் கருத்தொவ்வாச் சலிப்பாற்போலும்.

மேலும், ஆரியவேதமும் தமிழ்வேதமும் ஒத்தகருத்துடையனவாத லுணர்த்துழி வியாசசூத்திர மாபாடியகர்த்தருள்ளே சைவமாபாடியகர்த்தரெனச் சைவசமயிகள்பலரும் வழிபடும் நீலகண்டசிவாசாரியரை அவர் சிவாசாரியத்துவத்திற்குத் தகுதியுடையரென்பதற்கு உடன்பாடிலராய் "ஆசிரியர் நீலகண்டர்" என்றார். ஆசிரியரென்னும் மொழியையும் சிவாசாரியரென்னும் மொழியையும் அபேதமாகக் கொண்டனரேல், ஆசிரியர் அருணகிரியார், ஆசிரியர் மறைஞானசம்பந்தர், ஆசிரியர் உமாபதியாரெனச் சந்தானகுரவரையும் ஆளாததெவன்? அவரைச் சிவாசாரியரெனவும் இவரை வாளா ஆசிரியரெனவும் சிலராண்டிருத்தலின் அவ்வாறாண்டதெனின்,—ஒவ்வோர் கோட்பாடு பற்றி முரணிச் சிலரவ்வாறாளினும் தக்கார்பலரும் நீலகண்ட சிவாசாரிய ரெனவே ஆண்டமை அதிபிரசித்தமேயன்றோ? ஒவ்வொரு பெயரையும் உலகில் வழங்கும் அத்திறத்தினையினும், இயற்பெயர்பின்னிலைவச் சிறப்புப்பெயரை முற்பெய்தாளுதலில் விருப்பேல் அவ்வாறாளுங்கால் இயற்பெயர் சிறவாதாயின் அப் பெயர்ப்பின் யாதேனும் விசேடணமொழி செவிக்கின்பம் பயக்குமாறு இறுதியினிட்டாயினும் வழங்குவது மரபேயாக, அவ்வாறன்றிப் பிரபல இம்மாபாடியகர்த்தரை ஆசிரியர் நீலகண்டரெனத் தீட்டித் திராவிடமாபாடியகர்த்தரையும் இவ்வாறு ஆசிரியர் சிவஞானரெனத் தீட்டாது "ஆசிரியர் சிவஞானயோகிகள்" என இறுதிவிசேடணமுமிட்டு ஆங்காங்குந் தீட்டுவதுமாறன்றோ? எப்பெயர் எவ்வண்ணம் பல்லோராலும் பாராட்டப்படுகின்றதோ அப்பெயரை அவ்வண்ணமே பாராட்டுவதன்றோ பண்பு; இவ்வண்ணமே பிறபெயர்களையேயன்றித் தம்பெயரையுந் தீட்டித் திகழ்வியாததென்னையோ? நாவலர் யாழ்ப்பாணச் சபாபதியாரென்பது தஞ்செவிக்கின்பம் பய

வாமைகாண்பார் முன்னும்பின்னும் விசேடணமிலதாக ஆசிரியர் நீலகண்டரெனமொழிவதும் அறிஞர்செவிக் கின்பம்பயவாததொன்றுமெனக் காணாதது அதியற்புதமே.

ஆண்டே "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு - மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை - திருவா சகமுந் திருமூலர் சொல்லு-மொருவா சகமென் றுணர்" என்னும் அருந்தவப்பிராட்டியாராகிய ஔவையார் திருவாக்கிற்போந்த அம்முனிமொழிக்கு, வியாசமுனிவரருளிய வேதாந்தசூத்திரமெனப் பொருள்கோடலே மேலோர்துணிபாக, இவர் முனியென்றது திருவாதவூரடிகளையெனக் கொண்டு, திருவாதவூரடிகளருளிய கோவை திருவாசகமென அச்செய்யுட்கு முடிபுகூறி, அம்மட்டினகலாது அவ்வியாசசூத்திரத்தைத் திருமுறைகளோ டொப்பவைத்தெண்ணல் அமையாதென்பாராய், "வியாசநூல் ஏகான்மவாத நுதலுவதென்று சித்தாந்தப்பிரகாசிகையினும் சிவஞானமாபாடியத்தும் முறையே சர்வான்மசம்புசிவாசாரியரும் ஆசிரியர் சிவஞானயோகிகளுங் கூறுதலின் அதனை அவற்றோடுடனெண்ணி ஒருவாசகமென்றல் பொருந்தாமையுணர்க" என்று பிறிதோர்கோட்பாடுபற்றிப்போந்த அவ்வாக்கியங்களையே பிரபல பிரமாணமாகக்கொண்டு பேசினர். பேசியவர், அச் சூத்திரம் அவரவர் பருவத்துக்கீடாகப் பொருளுணர்வுநல்கிப் பயப்படுமாறு வேதமாண்பொருள் முழுவதுந் தொகுத்து அருளிச் செய்யப்பட்டிருத்தலின் அந்நாட்டொடங்கி ஆய்ந்தமுனிவராதியரால் அஃது, பிரபலவேதாந்தசூத்திரமென விதந்துபாராட்டப்பட்டு வருவதென்பது போதர, "ஏத்திடு சுருதிகளிசைக்கு மாண்பொருண் - மாத்திரைப் படாவெறு மாசில் காட்சியர்-பாத்துணர் பான்மையாற் பலவ கைப்படச் - சூத்திரமானவுஞ் சொற்று வைகினன்" என்றருளிச்செய்துள்ள கச்சியப்பசிவாசாரியராதியர் வாக்கியங்களைச் சற்றுங் கவனியாதொழிந்ததென்கொலோ!

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

கவனியாமை இச்செய்யுட்கருத்தை நுணுகியாயு மதுகையின்மையானோவெனின் அற்றன்று, மற்றென்னெனின்,—ஆய்ந்துவைத்தும், அச்சூத்திரத்திற்கே வழுக்கூறிவிடின் அதன்வழிப்பட்டதென அம்மாபாடியத்தைச் சைவர்பலரும் பாராட்டாது தம் வழிபடுதெய்வமாக விளங்கும் யோகிகளருளிய திராவிட மாபாடியத்தையே சைவமாபாடியமெனப் பாராட்டுவரென்றன்னி, அவ்வியோகிகளுளக்கருத்தைத்தழீஇ, இங்ஙனமெல்லாங் குழறுகின்றார். குழறினும், இஃது இவர்சிந்தனைப்படி சித்திக்குந் தரத்ததாமோ? இவர்கூறும் முனிமொழிப் பிரசங்கத்தை ஒவ்வொருவரும் முனிமொழிப் பிரசங்கமாகவே புறக்கணித்தொதுக்கல்போல ஆசிரியர் நீலகண்டரென்னும் அக்கூற்றும் புனைந்துரைத்ததுபோலினும் வஞ்சகமாட்சியின் வனைந்துரைத்ததென் றொதுக்கற்பாலதேயாம். அவர்மாட்டமைந்த சிவாசாரியத்துவத் திறங்குறித்து அவ்விசேடண மிறுக்காதொழியினும் வைதிகசைவ மாண்பினராயுள்ளார்க்குச் சிவமென்னும்விசேடணம் இறுதியினிறுவி நீலகண்டசிவம் கேசவசிவம் மணியசிவம் என்றித்திற மிசைக்கும் உலகவழக்குக் குறித்தேனும் இறுக்கலாமே! அவ்வாறேனு மிறுக்காதது இவர்க்கடாதுமன். அற்றேல், வைதிகசைவமாண்பினரையும் ஆசிரியரகத்தியனார் ஆசிரியர்சங்கரர் என்றித்தகையி னிசைப்பதும் யாண்டுங் காண்டுமேயெனின்,— இதுபோல்வதன்றித் தொன்றுதொட்டே அங்ஙனம்பயின்றுவருதலின் அதுபற்றியவிசாரம் ஈண்டைக்கு அநாவசியகமென்பது. அவ்வேதாந்த சூத்திரத்தினகத்தே சைவசித்தாந்த நுண்பொருளேயன்றி ஏனைச்சமய நுண்பொருள்களும் நிரம்ப வமைந்திருப்பதோர்ந்தே நீலகண்ட சிவாசாரியர் சங்கராசாரியர் இராமானுசாசாரியர் மத்துவாசாரியர் பண்டிதாராத்திரியரென்னும் ஐவரும் தத்தங்கொள்கையை காட்டி மாபாடியங்க ளருளியிருக்க, அஃதோர்ந்துணராது இவர் ஏகான்மவாதமொன்றே அதனுதலுவதென அந்நூலை யிழிக்கு

முகத்தானே அம்மாபாடியங்கட்கும் இழிவேற்றினு ராகலின் இவரது விபரீதவுணர்ச்சிதோன்ற இதுபற்றிச் சிறிது ஈண்டு விவகரித்ததென்க.

மற்று, வடலூர் இராமலிங்கசுவாமிகளியற்றிய செய்யுட்கள் எளிதிற் பொருள்விளங்கநிலவிச் சிவபத்தியை எவர்க்கும் விளைப் பனவென அவ்வளவிற்கொள்ளாது அவற்றைத் தேவாரம் திரு வாசகமாதிய திருவருட்பாக்களோடொப்பித்தல் கழுவாயில்பெ ருங்குற்றமென்பது ஒட்பமுடையர் பலர்க்குமமைந்த திட்ப முடைத்துணிபே. அதுபற்றித் திருமுறையிலக்கியமரபியலில் வலியுறுத்தியது மாண்பே. அத்துணையினகலாது "இவர் கலைப் புலமைதானும் நிரம்பினரல்லரென்பதற்கு இவரியற்றிய பாட் டுரைகளிலுள்ள சொல்வழுவும் பொருள்வழுவுமே உறுகரி யாம்" என்றும், "இவர் உலகெலாமென்பதற்குப் பலவாறு விகற் பித்துரைத்தன சொல்வழுவிராய் வேதாகமவுரையளவை மா றுகலின் உலகங்கொள்ளாது" என்றும், "எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு - கொள்ளாத கொள்ளா துலகு." என்றுங்கூறி, மேலும் அசங்கதமாக அறிவுமாழாந்து பல்லாறு வைதுரைத்தமை மாண்போ? இஃது சற்றுங்கல்லாப் புல்ல ரியல்பாமன்றிக் கற்றுவல்ல புலவ ரியல்பாகுமோ? இவர்போல வழுக்கலவாக் கலவிப்பெருமித அவதாரபுருடரெவர்? அச்சோ! இதுகிடக்க. கலைப்புலமைசூழ்ந்தே பலர்பாராட்டும் அவர்செய் யுளுரைகளை இகழ்வான்புக்க இவர்செய்யுளுரைவளங் காண்ட ற்கு, "மன்னு மாமுதற் கடவுளை மனத்திடை நிறுவி - யென்னை யோர்பொரு ளாக்கொண்டாள் குரவனை யிறைஞ்சி, யின்ன மா ண்டிரா விடப்பிர காசிகை யென்னும் - தன்னை நேர்தரும் தமிழ் வர லாறு சாற் றுவனுல்." என்னுந்திராவிடப்பிரகாசிகைச்செய் யுளும், அப் பிரகாசிகையில் "உலகெலாம்" என்னும் பெரியபுரா ணத்திருப்பாடலுக்கு வாதமேலிட்டுவரைந்தும் பொருட்போத மேலிட்டதாகாது புற்கெனமுடிந்த வுரையுமே வியஞ்சகமாய்

நிலவி, அவர்செய்யுளுரைவளங்களுங் காணவல்லுநர்க்கு, உலகம் பயனுள்ளனவாகக் கொள்ளற்பாலன இன்னவென்பதும் பயனில்லனவாகத் தள்ளற்பாலன இன்னவென்பதும் கரதலாமலகம்போல இனிது தேற்றுமாகலின் இருவர்செய்யுளுரைகளின் ஏற்றத்தாழ்வுகளைப்பற்றி யாம் மிகைபட விரித்திலம்.

ஆண்டை ஷை. சுவாமிகள் செய்யுளுரைகளை வைத தெற்றிற்கு? ஆன்றோர்சித்தாந்தப்பொருட் கருத்துக்களே மிக்கமைந்தனவெனப் பிறராற்பாராட்டப்படினும் தாங்கண்ட சித்தாந்தப்பொருட்கு அவை மாறுகோடலினெனின்,— பற்பல நூலுரைகளும் அவரவரநுபவவகையான் ஒன்றொடொன்றொத்தும் ஒவ்வாதும் நிகழ்வதும் ஒவ்வாதனவற்றைநீக்கி ஒத்தவற்றைக் கைக்கோடலும் உலகியல்பேயாகத் தாம் அவ்வியல்பிற்சேறலொழிந்து வீணே புறங்கூறலாக விளம்பினமை சான்றோர் முகத்துச் சழக்குரையாமல்லது வழக்குரையாகாதென்க. இவர் சிதம்பரத்தினடாத்திய முந்தியதொரு மகோபந்யாசத்தில் ஷை. சுவாமிகளையும் அவர்பாடல்களையும் இழித்துரையாடிய வழி, அவை அசப்பியமும் பொய்யும் அபவாதமுமாகவே யிருந்தமையின் அச்சபையினிருந்தாருட்பலர் கொதித்துக்குமுறி "இதுதானோ மகோபந்யாசம்? இத்திறமிழித்துரையாடுவார்க்கு நாவலர்பட்டந்தகுமோ? இப்பட்டந்தந்தவர் யாவர்" என்றித்தொடக்கத்தனவற்றை இவ்வாறன்றி ஏகவசனங்களால் ஆயிரங்கால் மண்டப இராசசபையிலே நறுமுறுத்தும் எதிர்த்துக்கையாடியும் அவமதிக்கப் பரிபவமுற்றும், மேலும் இதிற்பிரவேசிப்பது விழுமியகுணமாமோ? தம்பிரகாசிகையில் அவர்பாடல்களைப்பற்றி வழுத்திரட்டொன்று வெளியிடப்படுமென்றார். அவ்வியமனத்தால் இவர் அங்ஙனம்வெளியிடினும் அப்பாடல்களினருமைகண்டார் முன்னையினுமிருமடங்கு பாராட்டுவதல்லது இவர்வழுவாசகங்கொண்டு அவை வழுவுளவெனக் கொள்ளாரா

கலின் வெளியிடுமேது, வழுத்து இரட்டுக்குக் கருவியாமன்றி இவரெண்ணப்படி வழுத்திரட்டாய்கிற்குங் கருவியாகாதென்க.

இன்னும், தாமியற்றியசெய்யுட்களில் சற்றும் நயமிலவேனும் சாலநயங்கற்பித்தல் கவிஞரியல்பு. அங்ஙனமாக, இவரியற்றிய பாரததாற்பரிய சங்கிரகத்துட்பட்ட ஒன்றுதலையிட்ட இருபான்செய்யுட்கு நயங்கற்பிப்பான்புக்கும் அவை நயந்தராமையானோ தருவிக்குந்தரம் தம்பாலின்மையானோ விசேடக்குறிப்பு மில்லையாகப் பொழிப்புச்சிற்றுரையெழுதி, இவ்வளவானே தமக்கு உரையாசிரியத்தலைமை சித்தியாதெனநுனியாது சித்தித்ததாகவுன்னிப் புறம்போந்து, பெரியபுராணவுரையை மறுப்பான்றலைப்பட்டு, “ஆறுமுகமுனிவர் ஆசிரியர் சொற்பொருட்பெற்றி தேறமாட்டாது ஆண்டாண்டுப் போலியாகவுரைத்தனவும் வழு மலைதரவுரைத்தனவும் மிகப்பலவாம். ஆறுமுகமுனிவருரைகூறுதொழிந்த புராணங்கள் சிலவற்றிற்கு இராமலிங்கரென்பாரொருவர் திருவிருத்தங்கடோறும் ஆசிரியர்கொண்ட சொற்பொருள் விருத்தமுற உரைகூறி முடித்தார். இவரெல்லாந் தொல்காப்பியமுதலிய நல்லியற்புலமைநிரம்பி உரைகூறினாரல்லரென்பதற்கு இவர்வாக்கிய வியல்வழுக்களேயுறுசான்றுமென்க” என்றார். இங்ஙனநுணுகிப் புடைபடவொற்றி ஆராய்ந்து மெய்ப்பொருள் காணவல்லார் இவரன்றியாவருளர். ஓ ஓ! முன்னோர்க்கும் முனிவராதிய விசேடணந்தர மனம்பொருந்தாத விவ்வள்ளலார் வடமொழி தென்மொழிப் பயிற்சியுணர்வும் துறவுமுதலிய தூயவொழுக்கமுந்துறுமலின் முனிவரெனவே பலருமதிக்கத்தக்க ஷை சுவாமிகளுக்கு முனிவரெனும் விசேடணந்தந்தது, யாந்தாநதொழியினோ இச்சுவாமிகள்பாலபிமானம்பூண்டு இக்காலத்துள்ளபலராலும் அவமதித்தற்பாடெய்துவமென்னும் அச்சத்தானன்றிப் பிறிதானன்று ; தந்ததுவாய்மையேல், முதுதெய்வீகமுடைய முன்னோரியற்றியவற்றுள்ளும் பற்பலநூலு

ளைகள் வடமொழிக்கண்ணும் தென்மொழிக்கண்ணும் சிற்சில பாகங்களில் அவரவர்கருத்துவகையான் மாறுகோட லோர்ந்தேனு மனவொருமையுறாது தம்மினெத்தனையோமடங்கு நூற்றுறைபயின்றுபெற்ற நுண்ணுணர்வுடைய அப்பெரியரை ஆசிரியர்சொற்பொருட்பெற்றி தேறாராக்கித் தாந்தேறியார்கடுப்ப நடித்து, "இலக்கணக் கவிஞர்சொல் லின்பந் தேடுவர் - மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள் - சலத்துறு கமலத்தைத் தாவும் வண்டதித் - தலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மை போல்" என்பதன் பிற்பகுதிப் பொருளுவமங்களை விளக்கித் திரிவரோ? திரியாரன்றே.

இப்பால், தமிழிலக்கிய விலக்கணங்களாதிய முறையினாய்ந்து தெளிந்து பிரதியுதவிநோக்காது அனுதினமும் நன்மாணாக்கர்களுக்குக் கல்விகற்பித்தலும் எவர்க்கும் பயன்பட அரியநூல்களை அச்சிட்டுபகரித்தலுமாதிய நன்னெறியிற்றலைநின்று நன்மதிப்பெய்தியுள்ள நங்குரவராகிய இராமலிங்கசுவாமிகளுக்கும் மேற்கிளந்த வடலூர் இராமலிங்கசுவாமிகளுக்கும் சுவாமிகளென்னும் விசேடணமொழியிறுக்காது வாளா இராமலிங்கரெனப்பதித்தனர். இங்ஙனம் பதித்தமை திருவாவடுதுறையாதீன வித்வசிகாமணியாய் விளங்காநின்ற சபாபதிநாவலயோகிகளென அளவின்விஞ்சி நீண்டபெயரும் நீண்டவடிவும் தாம் படைத்தாங்குப் படையாமை முன்னியோ? "உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க் - கச்சாணி யன்னா ருடைத்து" என்பது இவர்சிந்தனைக்கண் வந்திலதுபோலும். இது கிடக்க. யோகியெனும்பட்டம் யோகத்தானெய்திபதுதானே? ஆ ஆ! இவர்யோகம் எவர்க்கெய்தும்! "பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை - தரியா துயர்வகன்று தாழும்" என்பது சரதமாதற்கு, அப்பெரியராதியரையிழித்து இவர் பூண்டுகொண்ட யோகிபட்டம் அந்ததிராவிடப்பிரகாசிகை நூல் புறம்போதருமளவுங்கூட நிலவாது முப்பானான்குதினத்

துள் மூன்று மகோபங்கியாசச் சிறுநோட்டீசி னிலவிச் செந்தமி ழ்ச்சர்வகலாசங்க ஸ்தாபனபிரசித்தத்தோடே அப்பிரசித்தமாக அறவொழிந்ததுவே போதியசான்று. மேலும் இவர்க்குரிய மற் றும்பெயர் நிலவாது ஒவ்வொன்ருக வொழிதற்கு இப்பெய ரொழிவே உற்பாதமாமென்க.

அங்ஙனங் கூறுவதடாது. நோட்டீசுகளில் யோகிகளெனப் பிறர்பதித்துவிட்டனர். திராவிடப்பிரகாசிகை பதிப்புழித் தற் புகழ்வஞ்சி அது இவரானீக்கப்பட்டதெனின்,—அந்நோட்டீசு கள் இவர்யந்திரசாலையினே பதித்ததும் ஆக்ஷேபித்தவர்க்கு யோகிபட்டம் தமக்குத்தகுமென்று சாதிப்பான்புக்கதும் பிர சித்தியாகலின் தற்புகழ்வஞ்சித் தவிர்க்கப்பட்டதென்பது சா லாதென்க. பிரகாசிகையில் "வித்வசிகாமணியாய் விளங்கா நின்ற" எனப் பிறர்கூற்றினன்றித் தங்கூற்ருகவே தம்விளக் கத்தைத்தேற்றித் தொடக்கத்திற் பதித்துக்கொண்ட இப்பெரு ந்தகையார் யோகிபட்டத்தை நழுவவிடுவரோ? தெய்வகதியா னன்றோ நழுவியது. இங்ஙனங்கொள்ளாவழி, அடுத்த ஷெ சங்கஸ்தாபன பிரசித்தத்திலேயே அப்பெயரகற்றப்பட்டிருத் தலின் அதுபதித்த இவர்காரியதரிசியாராகிய மாணிக்கவாசக பிள்ளையென்பவரே இவ்வியோகிபட்டம் இவர்க்கெவ்வாற்ரு னுந் தகாது. அங்ஙனமாக, யாரும் அப்பெயர்சூட்டுவது அநு சிதமென் றகற்றியதாகவன்ரே முடியும். உலகமெள்ளாதன எண்ணிச்செயல் தம்பக்கல் எட்டுணையுமின்ருகவும் இருப்பதாக வபிநயித்து உள்ளபடியே எள்ளாதவெண்ணிச்செய லெய்தி யுள்ளாரையும் மேற்காட்டியவாறு இழிப்பான்புக்கு இவர் "கற் றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம் - வெற்று ரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர் - நில்லாத தென் னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன் - சொல்லாமே சூழ்ந்து சொலல்." என்பது கடைப்பிடித்துத் தந்தவறு புலனுகாமைக் கேதுவாகிய சொற்பிரயோகஞ்செய்து பகட்டிச்சேறற்பயனும்

தாம் அரிதுகற்ற கல்விக்கின்றாக இவ்வண்ணம் கொன்னேகழிவது குணமன்று.

ஈண்டு இவர்க்கு நாவலர்பட்டந்தான் யாவர் நல்கியது? திருவாவடுதுறை மகாசந்நிதானத்தெனின்,—எவ்வெவ்வாதீனத்தருக்குஇப்பான்மைய பட்டமளித்தலதிகாரமுண்டு? அங்ஙனம் எவ்வெவ்வாதீனத்தில் எவரெவர்பெற்றனர்? தற்காலை நாவலர் பட்டமுடையரெல்லாம் ஒருதரத்தராய் இப்பெயர் ஆதீனங்களிற் பெற்றவர்தாமோ? பிறவாற்றானும் புனைவதுண்டேல் ஆதீனங்களிற்பெறுவதால் விசேடமென்? அது எத்தொழிலியற்றற்குரியராக எத்தகையர்க்கு நல்குவது? சிறந்த குருஸ்தானமாதல்குறித்து இப்பெயர் ஆதீனத்துப்பெற்றிருப்பின் இதுகொண்டு பல்லோருமதிக்க உயிர்க்குறுதிபயப்பவற்றை உபந்நியாசஞ்செய்தலும் அரியபெரியநூல்களை அச்சிற்பதித்தலுமுதலியன புரியலாமன்றி ஏனையரைக்கண்டித் ததிகாரஞ்செலுத்தலியலுமோ? இயலுமெனின், கண்டிக்கப்பட்டார் இவருளடங்கியொழுகல் வேண்டுமாகலின் அவ்வாறொழுக எவரெவரைவென்றனர்? ஏதேனுஞ் சிலவற்றைப்பற்றி விவகரித்தலானும் பத்திரிகையிற்றீட்டலானும் வெல்லினும் அது, அந்தசடகநியாயம் அல்லது குணாக்ஷரநியாயத்தின்பாற் படுவதன்றி எவருமேற்கும் வெற்றியின்பாலதாய் முடியுமோ? முடியாதே: தம்முட்பிறரடங்கப் பேரரசரா லதிகாரமெய்தி உஞற்றுந்தொழிலன்றோ உலகினிலையுறுவது? அதிகாரமெய்தாமலே அப்பெருந்தகைமையை எளிதுறுவான் மலிபெருங்காதல்கொளின் அதுவாய்க்குமோ? அவ்வாதீனத்திலே இவர்க்குமுன்பு எவர்க்கும் கல்விகற்பித்தலோடு கவிமாரிபொழியுங் கொண்டலாய் விளங்கி எண்ணிறந்த சிவபுராணாதிகளும் கருவிநூல்களுமியற்றியமையன்றி மேலும் பற்பலரைப் பல்லோருமதிக்கும் வித்துவத்திறமுடையராக்கிய நாவலமிக்க மகா வித்துவானாகிய மீனாக்ஷிசுந்தரப்பிள்ளையவர்களும் தம்மாதீனத்தரேயாக, இப்பெ

யர் அவர்க்களியாது இவர்க்குமாத்திர மளித்தனரென்பது பட்டாங்காத லெங்ஙனம்? அதுவேண்டாம், பிரசங்கிக்கும் நாவலமிருத்தலின் இப்பெயரமையாதோ வெனின், — அமையும். ஆனால், முத்தமிழ்ப்புலவரெனச் சிலருளராதல் காண்கின்றோம். அவர் இசைநாடகவிடயங்களுட் டெரிந்தசிலகொண்டு சண்டப்பிரசண்டமாகப் பிரசங்கிக்கின் இயற்றமிழொன்றேவல்ல நாவலர்பெருமான்கள் நாணியொதுங்கவேண்டுமல்லது அதினொன்று எதிரீடாத லிசையுமோ? இசையாவழி ஆங்கு இவரினுமவர், பெருநாவலரெனப்படுவரே? படின், அங்ஙனம் அப்பெயர்புனைதலான் மாண்பெவன்? சான்றகல்வியுடைமையிற் சார்வதேசால்பு. எனவே, பிரசங்க அளவானே பெருநாவலரெனப்படினுங் கல்விசாலாமையின் இயற்றமிழ்வல்லோரினும் அவர் சிறப்பெய்தாவாறுபோன்று, இவரும் அதிகப்பிரசங்கியாராதலானே நாவலர்பட்டம்பெறினும் கல்வியால் இவரின்மிக்காரினும் இவர் கழிசிறப்பெய்துறாரென்க.

தாம் யோகியாதலின் அணிமாவெனுஞ் சித்தியான் ஆசிரியருண்ணுழைந்து அவர்கருத்தறிந்தார்போன்று "திருவிருத்தங்கடோறும் ஆசிரியர்கொண்ட சொற்பொருள் விருத்தமுற உரைகூறிமுடித்தார்" என்றும், "இவரெல்லாம் தொல்காப்பியமுதலிய நல்லியற்புலமைசிறம்பி உரைகூறினாரல்லரென்பதற்கு இவர்வாக்கியவியல்வழுக்களே உறுசான்றாம்" என்றும், ஷை சுவாமிகளியற்றிய முருகேசவெண்பாப் போலிநூலென்றும், தம்பிரகாசிகையிற்சாற்றி, தஞ்சுதேசவர்த்தமானியிலும் தம் புல்லறிவாண்மை புலப்படுப்பான் "பெரியபுராணவுரையும் முருகேசவெண்பாவும் போலியுரையும் போலிநூலுமாதல் இனிக் காட்டப்படும்" என்று வெல்லுமியல்பிற் றெருட்டுவாயாடுவார் போன்று வெளிதுவிளம்பினர். விளம்பியதிவ்விதம்! இதனுனே, இவர் "பித்தர்க்குத் தஞ்சொல்லானிலுஞ் செம்மை" என்னும் பெரியர்வாக்கியத்துக்குப் போதிய இலக்கியம் [illegible]க்குவா

மகாமகோ[illegible]
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
[illegible] - 600090.

ராய்ப் புறம்போந்து எவ்வாற்றானாயினும் குற்றங்கூறினோமெனப் பெயரிடுதுமென் றிங்ஙனம் ஏதேதோ தெரிந்தவர்போலத் துரபிமானமீதூர்ந்து பஃறலைப்பட்ட விவேகத்தாற் பகர்கின்றனரெனச் சான்றோர் வழங்குவதல்லது பல்காப்பியங்களோடு தொல்காப்பியமுமுணர்ந்த பண்டிதத்திறமையான் வழூமதித்தியம்புகின்றனரென மறந்தும் வழங்காரென்க. ஆகவே, என்றும் அறியவல்லவல்லாத கூகைமுதலியவற்றின் கண்களுக்கும் படலநீக்கியவழியறியவல்ல குருடன்கண்களுக்கும் ஆதித்தனொளி விளங்காவாறுபோலப், பகுத்தறிதன்மாட்டாதபிறர்க்கும் அஞ்ஞானபடல நீக்கியவழிப் பகுத்தறியவல்ல இவர்போல்வார்க்கும் அவ்வுரைநூல்களினருமை விளங்காதொழியினும், படலநீங்கியகண்ணுடையார்க்கு ஆதித்தனொளிவிளங்குமாறுபோல அஞ்ஞானமறைப்பினீங்கிய அறிவெனுங்கண்ணுடையார்க்கு அவ்வுரைநூல்களினருமை இனிதுபுலப்படும். படவே, குருடன் ஆதித்தனில்லையென்பது குற்றமாகாதவாறுபோல இவர் அவ்வுரையும் நூலும் சொற்பொருளமைதியும் இயல்வரம்புமுதலியவும் இல்லனவென்பது குற்றமாகாதென்பதூஉம், இங்ஙனம் புலம்புதலுக்குக்காரணம் அவ்வுரைநூல்களினருமைமதிக்கும் மதுகைபெறாத வெளிற்றறிவுடைமையினென்பதூஉம் தேற்றெனப் புலனாமென்க.

இன்னும் "திருவிருத்தங்கடோறும் ஆசிரியர்கொண்ட சொற்பொருள் விருத்தமுற உரைகூறி முடித்தார்" எனத் தம்வெள்ளறிவாற்கூறினும் "யாமுமறியோம், அவளும் பொய்சொல்லாள்" என்னும்பழமொழிப்படி இவர்நாவிலுள்ளவள் சுவாமிகளுளக்கருத் துணர்ந்தவளேயாகலின் தான்கோடாது, "செய்யுளியலானும் பொருணோக்கத்தானும் வெவ்வேறு திறத்தவாகிய பாடல்கடோறும் ஆசிரியர்கொண்ட சொற்பொருள்களை அவ்வச் செய்யுட்கிசையுமாறு வேறுபாடுவிளங்க வுரைகூறி முடித்தார்" என்னும் செம்பொருணல்குதற்குரிய வாக்கியங்களை இவர்நாவிற்

ஹேற்றுவித்து உள்ளதேகூறினுளாதலுங்காண்க. மற்றும் போலியுரை போலிநூலென்பனவும் முறையே, முன்னோ ரிலக்கியவுரைபோல்வதெனவும் சோமேசவெண்பாமுதலிய நூல்போல்வதெனவும் பொருள்பட, அம்முன்னோர் உரைநூல்களையே ஆதரவாகக்கொண்டு அவற்றினெறியே சேறலின் ஒப்புடைப்போலியாவதல்லது, ஒவ்வொன்றைத் தழீஇயினபோன்றுகாட்டித் தழாதேகும் ஒப்பில்போலியாகாமையு முணர்க.

பெரியர்நூலுரைகளைமறுத்தலின் இவர்யார்? அருகரோ! அருகரும் தற்காலையரசநீதி யறிந்திருத்தலின் வாதப்போருக்கல்லது வசைப்போருக்கெதிரரரே! ஏனை நூலுரைகளை யிழிப்பான்புகுவார்க்கு, அவற்றினும் அறப்பெரியநூலுரைகளை ஒன்றற்கிரண்டாகவியற்றித் தம்வலிகாட்டி எதிரியைத் தலைகுனிவிப்பதன்றோ தகைமை. சாலக்கல்லாக் கழிமாமடனுடையர்க்குத் தாங்கற்ற அற்பகல்விகேள்விகளானே பிறர்நூலுரைகட்குப் பெரிதுங் குற்றங்கூறல் கூடுமே. "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் - சொல்லிய வண்ணஞ் செயல்" என்றார் முதற்பாவலருமாகலின் வாயானன்றிச் செயலாற்காட்டுவதன்றோ வன்மை. இவ்வாறன்றி வாயாற்காட்டலொன்றே வலிக்கின் வெறிதுங்கல்லாமைமேலு மிகப்பொல்லாரிவரென்று அவ்வர்நூலுரையாதிகட்குரிய வல்லார் தஞ்சொல்வன்மையேயன்றி மற்றும் பல்வன்மையுங்காட்ட வலிப்பரே? பாவலரெனத் தம்மைவியக்கும் இந்நாவலர் "எண்ணித்துணிககருமம்" என்பதெண்ணுதெவனோ? இவரியல்பு எற்றேயாக, எமக்கென்? இனி முருகேசவெண்பா நிகருநூலும் பெரியபுராணவுரை நிகருமுரையும் ஒப்பில்போலியாகவேனும் ஒவ்வொன்றியற்றுந் திறம் வறிதும்பெறுதுவைத்து வல்லுநர்மானப்படகட்டின் அது, உள்ளீடின்றிய இவரியல்பு அரவின்கா லரவறியுமாப்போல் அறிந்துளாரவையகத்தே ஏயே! இவரறியாமை யிருந்தவா

றென்னேயென எள்ளிநகையாடுவிப்பதன்றித் தகையாடுவியாமை சத்தியமாமென்க.

இப்பெற்றியநூலுரைக ளியற்றிலரேனும் தாம்மொழிபெயர்த்த பாரததாற்பரியசங்கிரகத்தின் இருபானொருசெய்யுட்கு இலகுவுரையும் சின்னூலும் ஆற்றியுளராகலின் மறுப்பெழுத வல்லரேயெனின், "நூற்பலகல்" என்னுந் தெய்வத்திருவாக்கின் நுண் பொருளுணக்காது பிதற்றுரை பேசற்க. ஓர்வகையுணர்வுடையார் மற்றோர்வகை யுணர்வுடையரை மறுப்பது யாங்ஙனம்? கண்டனுசிரியராவார்க்கு அவ்வவ்வுணர்வாற்றலும் இன்றியமையாதனவல்லவோ? பிறநூலுரையாசிரியரெல்லாம் பிறர்கோண்மறுத்தலைத் தந்நூலுரையளவே கொள்ளாநிற்கச் சிவஞானசுவாமிகள் அவ்வாறன்றித் தனித்தனிக்கண்டனமும் எழுதத்துணிந்தது ஒவ்வோர்வகை நூலுரைகளினும் ஒன்றும்பலவு மியற்றியருளிக் கற்றுவல்ல ஆண்மக்களெனப்படும் விபுதரியல்பு ஒருவாறு காட்டியமையினன்றோ? அற்றேல், அச்சிவஞானசுவாமிகள் இவ்வாற்றான் மற்றெவரினுஞ்சிறத்தல் பெறப்படுதலின் பிரகாசிகையில் ஆசிரியரென்னும் அடை அவர்க்காங்காங்கிருவியது அமைவுடைத்தாமேயெனின், — நன்று! இதுபற்றியிவ்வசரித்தற்கு ஈண்டைக் கிடையின்றாகவும் ஒருவாறிவைபு கோர்ந்தமையின் அதுபாடனைத்தின் வைத்தனை குறும். விழுமியகல்வி நுழைபுலமுடைமைப் பெருக்கத்தினியற்றிய பெரிய பன்னூலுரைகளும் சிலாநுபூதிப் பெருக்கத்தினியற்றிய சிறிய சின்னூலுரைகளுங் கொள்வாமென வழங்கல் கண்கூடாகலானும், அச்சிவாநுபூதியருட் சிலரியற்றியனவையும் அவரியற்றியவற்றினுட் பெருநூலுரைகளைக் கண்டனப்படுவானும், தம்மிற்றுறுந் தாத்தார்முன் அசிரியப்பரல்லது அவ்வநுபூதிப் பெருக்க முதலியவற்றுந் தம்மினுயர்ந்தார்முன் எவ்வாற்றுனுஞ்சிறவாமை தேற்றமாகலின் அவர்க்குமட்டும் அவ்வடையிருவியது அமைவுடைத்தாமாறு யாண்டையது?

இனி, இந்நாவலரியற்றிய பிரகாசிகையிற் பன்னூற்கருத்தும் பரந்துகிடத்தலாற் பன்னூலினும் பயின்றுபெற்ற நுணுக்கவறிவுண்மை பெறப்படுதலின் கண்டனாசிரியராக வல்லரெனக் கொள்ளாமோவெனின், — அதில் இலக்கிய விலக்கண சாஸ்திராதிகள் பற்றித் தெரித்தவெல்லாம் பெரும்பாலும் அவ்வந்நூலுரைகளுமுதலியவற்றைக் கல்லாருமெளிதுணர விளக்கி யச்சிற்பதித்த வித்துவசிரோமணிக டெரித்தனவும் சிவஞானபோதமாபாடிய முதலியவற்றிற் குறித்தனவுமாகியவற்றின் சுருக்கமாகவே காண்டலானும், ஒருவரும் விரிக்காததொன்றினுக்குப் பொருணயந்தோன்ற விரிப்பதே புலமையும், விரித்ததற்கு மேன்மேற் பொருந்துமாற்றான்விரிப்பது அத்துணைப் புலமையன்மையுமாக, சிலர் தத்தங்கொள்கைவழி கொண்டபொருள்களும் அக்கொள்கை மாறுபடப்போந்த மறுப்புக்களு முன்னோருடைத்தாய முதற்றிருக்குறளுக்கே தாமும்விரித்தனதை யுற்றுணரின் மேற்கண்டவற்றினும் வேறுநூலுரையாதிகளினு முள்ளன மிகத்தழீஇத் தங்கருத்துஞ்சிலகூட்டி முடித்ததாக ஏற்படுகின்றதல்லது முற்றுந் தம்புலமையானே கண்டெடுத்த பொருளாக ஏற்படாமையானும், தாஞ்சொந்தமாக வியற்றியனவாகிய சிதம்பரசபாநாதபுராணமுதலியவும் வசைப்பத்திரிகை சிலவுமே பதித்ததல்லது பழையநூலுரைகளுட் சிலவேனும் அச்சிற்பதித்தலு மின்மையானும் இவர் கண்டனாசிரியராக வல்லரென உலகங்கொள்ளாதென்க.

அற்றாயின், இந்நாவலர் தமதுபந்நியாசங்களினும் பத்திரிகைகளினும் செந்தமிழபிவிர்த்தி செய்யக்கருதி முப்பதுவருடங்களாகச் சிதம்பரத்தினும் குருக்ஷேத்திரமாகிய திருவாவடுதுறையினும் சென்னைமாநகரினும்வைகிநன்மாணாக்கர்களுக்குச் செந்தமிழிலக்கிய விலக்கணநூலுரைகள் சித்தாந்தநூலுரைகள் போதித்தும், தமிழ்வளர்ச்சியின் பொருட்டுஞ் சமயாபிவிருத்தியின் பொருட்டும் பலவகைநூல்களியற்றியும், பழையவரியசித்தாந்

த கிரந்தங்கள்சில பரிசோதித்து அச்சிற்பதித்தும், காலம் நன்குபோக்காநின்றே மென்றும், சிதம்பரத்தில் தமது மாளிகை செந்தமிழ்ச் சர்வகலாசங்க ஸ்தானமாக அமைத்துக்கொள்ளப்பட்டதென்றும், அதிற்கற்பிக்கப்படுங் கலைகளாகிய செந்தமிழிலக்கிய விலக்கணநூல் நியாயநூல் கேவலாத்வைதநூல் சுத்தாத்வைதநூல்ஆகிய இவைகள் இன்னவின்ன வாரங்களில் இத்தனைநாழிகைவரை கற்பிக்கப்படுமென்றும், ஞாயிற்றுக்கிழமைதோறும் உபந்நியாசஞ் செய்யப்படுமென்றும், இவற்றைச் சுருக்கமாக நடத்துவித்தற்கு இருபத்தையாயிரரூபா முதற்பொருள் வேண்டுமென்றும், சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலை தங்கருத்துப்போல அரியவிலக்கண விலக்கியமுதலியன கற்பித்து நடத்தப்பெறுமையேயன்றி நடக்கவேண்டியவைகளும் செவ்விதி னேற்படுத்தப்பட்டிலதென்றும், அதில் தில்லைவாழந்தணர் மறையோர் ஆண்டெழுந்தருளியிருப்பவும் சைவசித்தாந்த அகப்புறமான ஐக்கியவாதசைவம் பேணுவாரைக் கொண்டு புத்தகப்பரிசளிப்பித்தது விவேகமன்றென்றும், வீறு புகழ்படைத்த வித்வசிகாமணியான ஆறுமுகநாவலரவர்கள் பாடசாலை நடாத்தும்வித்தகம் அன்னவித்வமாட்சி யுடையார்க்கன்றி ஏனோர்க்காகுவதோவென்றும், எத்திறத்தினும் தாமிக்கிருப்பவைதோன்ற இன்னோரன்னவை ஏராளமாகத் தெரித்துள்ராக இன்னணமிறுப்ப தென்னெனின், — அவற்றுண்மை தோன்றச் சிறிது உணர்த்துதும்:—

இவர் முன்னைஞான்று ௵ சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயரா யிருந்தகாலத்துக் கற்பித்தவகுப்புக்கியைந்த பாடங்களிற்பயின்று இன்னும் தக்காரையடைந்து கேட்பவை கேட்டுத்தெளியுஞ் சிலரேயல்லாமல் அதன்பின்னர்க் கற்பிக்கப்பெற்றுப் பிரசித்தியுற்றா ரின்னரென்பதூஉம் அம்மாணாக்கர் தம்புலமை புலப்பட இயற்றியவை யின்னவென்பதூஉம் பெறப்படாமையானும், தம்மால் பழையநூலாகப்பதிக்கப்பட்

டன வேறில்லையாதல்பற்றிச் சிவஞானசுவாமிகளா லருளிச் செய்யப்பட்டனவாகத் தாமரிதுபதித்த கண்டனநூல் நான்கனுள் சிவசமவாதகண்டனமென்பது, ஏனையபோல வாக்கிய நெறிப்பிலதாயினும் ௸ சுவாமிகளருளியதே யென்றல் ஆதீனத்துணிவெனின், அஃதொன்றும் எளியநடையி னெழுதியதற்குக் காரணங்கண்டு அதனை உள்ளவாறுபதியாது, மாறுகொள முற்றுந்திருத்திப் பதித்தமையானும், சிதம்பரத்தில் தாமே தாபித்துக்கொண்டசங்கம் இவர்பக்ஷப்படி ஒருபக்ஷமும் நடவாமையானும், தாம்கற்பிப்பான் குறித்தவற்றுள் கே, வலாத்வைதநூலெனக்கொண்ட வேதாந்தசூடாமணிக்கு முதனூலாகிய விவேகசிந்தாமணி யருளியவர் நிஜகுணயோகிகளென்பது அந்நூல்வல்லார்பால் கேட்டுந்தெரிந்துகொள்ளாது சங்கராசாரியரெனத் தம்பிரகாசிகையில் ஓதுதலின், இவர்க்கு இன்னோரன்ன நூலாராய்ச்சி இம்மியளவுமின்மை வெளியாதலான், இவற்றைப் பூருவபக்கமாக்கித் தங்கொள்கையைச் சித்தாந்தஞ்செய்வான் இவர்கற்றவும் கற்பிப்பவும் இஃதொக்கும் விபரீதத் திறத்தவேயாமெனக் கொள்ளக்கிடத்தலானும், அவை உண்மையாதலெங்ஙனம்?

அங்ஙனமேல் வித்தியாசாலையைப் பற்றியவோவெனின்,— வித்தியாசாலை உலோகோபகாரத்ததாகலின் அதனபிவிருத்திப் பொருட்டுக் கவனித்தலும், அஃதென்ஞான்றும் நிலையுறுதற்கேதுவாகிய அனுகுணங்களை வகைகலவாவாறு நயம்பட வலியுறுத்து வகுத்தலும் பத்திரிகையாளர் கடமையேயாக, இவர் அந்நோக்கம் அணுத்துணையுமின்றிக், குழறுபடையாகப் பற்பல படைத்திட்டுக்கொண்டு பழிமலியப் பலநுவன்றுளர். அவற்றைச் சூழ்ந்தோரின் அதின் முதன்மையுபாத்தியாயராய்த் தாம் முன்னிருந்தும் இப்பொழுது யாதோராற்றானும் முதன்மையெய்தப்பெறுமை காரணமாக முறுகிப்போங்கிய அவ்வியமனத்தான் அவைநுவன்றவல்லது அவ்வித்தியாசாலை செவ்

வியகிலைமையின் வளரவேண்டுமென்னும் சிந்தனையான் நுவ
ன்றவன்றென்பது சிறுவருமுணர்ந்ததேயாகலின் அச்செயல்,
குந்திதேவி ஐம்மக்களையீனக்கண்ட காந்தாரி "அழுக்காறென
வொரு பாவி திருச்செற்றுத் - தீயுழி யுய்த்து விடும்." என்ப
தொருதலையாதலோராது நாம் ஒன்றும் ஈனப்பெற்றிலேமாக
நம்பின்னவள் ஐம்மக்களை யீன்றனளேயென்னும் நோனாமை
யால் தன்செவ்வியகருச் சிதையக் குக்கியிற் குத்திக்கொண்ட
மைக்கு இணமாமெனக் கொள்ளக்கிடத்தலானும், வித்தியாசாலை
நடாத்தும் வித்தகத்தின் மிகத்தேர்ந்து அத்திறம் பிறர்க்குத்
தேற்றுவார்போன்று வெளிவந்து, தாம் ஐக்கியவாதமுறுமை
காட்டுவொன்புக்கு, ஐக்கியவாதம்பேறுவாரை அகப்புறச்சமயத்
தனென ஆண்டுவிகற்பிக்க வேண்டுவதில்லையாகவும் விகற்பித்த
மை நோக்குழி அது, சிறுத்தொண்டநாயனார்பால் வைரவ சங்
கமராகியும் மானக்கஞ்சாறநாயனார்பால் மகா விரதியராகியும்
சிவபெருமானெழுந்தருள அந்நாயன்மார்கள் அச்சங்கம சொரூ
பங்களைக் கண்டுழி இவர்போல அகப்புறச்சமய சங்கம சொரூ
பங்களென அனுத்துணையும் விகற்பியாது பரசிவ சொரூபமா
கவே பாராட்டி வழிபட்டபண்பையும், சைவத்திறம்பலவும்
கொள்கைவகையிற் சிறிதுவேறுபடினும் ஒன்றற்கொன்றமைந்
துள்ள ஒற்றுமையை முற்றுமோர்ந்து முன்னைய நாயன்மார்க
ளெல்லாம் வேற்றுமைகருதியாது அக்கொள்கையரையும் மெய்
யன்பினிறைஞ்சித் தொண்டுபூண்டமையையும், இன்னணமிய
லும் அந்நாயன்மார்களினிலைமையை அறிந்துவைத்தும் ஆளுடை
ய நம்பிகண்முதலியோர் அவர்களைப் போற்றித் துதித்தபொற்
பையும், சித்தாந்தநூல்வழி நிலைத்தலையும் ஓதியாராமையை
த் தெருட்டுவதான்பேதமை, பிறக்கு நம்மொக்கிடங்களான் இது
வும் மற்சரமேலீட்டாற் கொட்டமன்று ஆராய்ச்சியின்மை
யினைந்ததேயென்பது தேற்றமாகும், அவ்வித்தியாசாலையி
ல் நீர்குறித்ததினத்தின் முதற்புதமாணாக்கர் பார்த்து தில்லைமொழுந்த

ணர்களுள் ஒருவரேயாகவும் தெளியாது, "தில்லைவாழந்தணர் மறையோர் ஆண்டெழுந்தருளியிருப்பவும் அகப்புறமான ஆக் கியவாதசைவம் பேணுவாரைக்கொண்டு புத்தகப்பரிசளிப்பித் தது விவேகமா?" என்று ஆங்குநடாத்திய வித்தகந்தோராது விளம்புவது மரபன்றென்பார்யாட்டு முற்கூறியதை விடுத்து, விதண்டாவாதியராய்த் தம்மனம்போனவாறு மற்றேதேதோ சுட்டி ஆடிக்காற்றினறுபட்டுழலும் படமொப்ப நிலைபெறின்றி முன்னொடுபின்முரண வசைமொழிவது, மேற்கிளந்த மற்சர மேலீட்டையே வற்புறுத்துதலானும், கேட்போர்க்கு அற்புதங் கெழுவுமாறு தந்தயாபரத்துவந்தோன்றத் தம்பத்திரிகைகளில் சித்திரித்தவெல்லாம் ஆராய்வுழி அந்தரத்தெழுதிய சித்திர மொப்ப ஒக்கவெறும்போலியாதல் ஒருவந்தமென்க.

அற்றேலஃதங்ஙனமாக. சந்தோபகாரமாக யாண்டும் சைவ வுபந்நியாசமியற்றிப் போதருதல் பிரசித்தமாமாலோவெனின், அப்பிரசங்கவைபவம் அறிதற்பொருட்டு வேண்டற்பாலன சில எண்டுக்காட்டுதும்:—யாழ்ப்பாண மாவிட்டபுரக் கந்த சுவாமிகோயிலினடாத்திய சைவப்பிரசங்கத்தில் சமவாதசை வர்களெல்லாம் நரகத்துக்குப் போவார்களென்றும், தஞ்சு ருவளிப்பத்திரிகையில் சமவாதசைவர்களைப் பிசாசுகளென் றும், அகோரசிவாசாரியர்பத்ததியைக் கைக்கொள்வோர் அச் சமவாதசைவர்களேயென்றும், சமவாதந் தம்பாலின்மை கா ட்டுவான்றொடங்கித் தூஷித்தமைபற்றி, அம்மாவிட்டபுரத்தி லே தகுதிபெற்றுள்ள சபாபதிக்குருக்களவர்கள் சகியாது "இப்பூமியிலுள்ள சிவாலயாதிகளில் நித்தியநைமித்திய காமி கங்களை நடத்தும் ஆதிசைவர்களும் மற்றும் மகாசைவர்க ளும் ஆதீனத்தருட்சிலரும் வேளாண்குருமார்களும் அப்பத் ததியைக் கைக்கொள்பவராதலும் வேளாளருள்ளே சிலரொ ழியப் பலர் அவ்வாதிசைவராதியர் சீடராதலும் கண்டும் இவரையெல்லாம் பிசாசுகளென்று சொல்லிவிட்டீர் நீர் யா

வர்? சமயதீக்ஷை விசேஷதீக்ஷை கல்யாணஹோமமாதிகள் அகோரசிவாசாரியர் பத்ததிப்படி வேதாரணியத்துச் சைவவேளாண்குருமார்களாற் பெற்றுக்கொண்டமையின் நீரும் பிசாசுதானே. நீரும் நரகத்துக்குப் போவீர் தாமே. நான் முன்பு பிசாசுதான் பின்பு சித்தாந்தசைவராகிய திருவாவடுதுறையாதீனத்துப் பண்டாரசந்நிதிகளையடைந்து தீக்ஷைபெற்றுச் சிவபூசையெழுந்தருளப் பண்ணிக்கொண்டேன் இப்பொழுது நான் பிசாசல்லேன் மோக்ஷஞ்சேர்வேன் என்பீராயின் உம்போல ஷெடியாதீனத்தையடைந்து தீக்ஷைமுதலிய பெருத மனைவியாதியர்பால் உண்டலும் ஒருங்குறைதலும் பெறுதலின் நீர் எப்படித் தப்புவீர்?" என்றின்னோரன்னவை மிகவும் விரிவிற்பதித்த பத்திரிகைகளிரண்டு கண்டாம்.

சென்னைப்பிரகடனமொன்றில் "சுப்பிரமணியசுவாமி ஞானசம்பந்தராய்ப் பிறந்தாரென்று கல்வியறியாதார்சிலர் சொல்லுவர். யாம் அப்படிச்சொல்லத் துணியமாட்டோம். சிவகணங்களிலொன்றாகிய சிவன்தான் ஞானசம்பந்தனாய்ப் பிறந்தது" என்று இவர்வெளியிட்டு, உடன் சென்னையினின் றகன்றொழிய; சைவநெறிபூண்டாரொருவர் அஃதுணர்ந்து, "ஸ்ரீஸ்கந்தரே ஞானசம்பந்தரென்னும் பிரபலபிரமாணங்கட்கு என்னசமாதானந் தேடிக்கொண்டு நீர்வாய்விட்டழுதது? போறபிசாசு அழுதுகொண்டே போகுமென்ற பழமொழியைப் புதுக்கினீரே, போலிநாவலர்பட்டத்தை மோலியெனக்கொண்ட கோப்பாய்ச் சபாபதிப்பிள்ளையே! கள்ளிக்கொம்புக்கு வெள்ளிப்பூண்கட்டியதுபோல உமக்கு நாவலர்பட்டங்கொடுத்தது யார்? காராட்டை வெள்ளாடென்று கூறுவதுபோன்ற உபசாரபட்டப்பெயர் வேண்டாம். "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ - தஞ்ச லறிவார் தொழில்." என்றின்னோரன்ன விடயக்குறித்து 'அஞ்ஞானமதசபேடிகை' எனவெளியிட்ட பத்திரிகையொன்று கண்டாம்.

இம்மட்டோ! இன்னும் சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலையிலே ஒருபரீக்ஷாகாலத்தில் வலிந்துபுகுந்து ஆண்டுக்கற்றமாணுக்கர்களைச் சிவான்மா பரமான்மாக்களின் இலக்கணம் பற்றிக் கேட்பான்றொடங்கித் தம்புலமைகாட்டுவான் சிலமாட்டுக்கடாக்களைச்செலுத்தி விடைகளையுந் தாமேகிறுத்தி அவரைமருள்வித்தமையாதியபற்றியும் இவர் சிதம்பரசபாநாதபுராணமாதியவற்றின் வழூக்கள்பற்றியும் ஆங்காங்குநிகழ்த்திய தூஷண வுபந்நியாசங்கள்பற்றியும் யாழ்ப்பாணப் பத்திரிகைகளாகிய உதயபானு முதலியவற்றிலும்; சென்னையில், வேதாந்தசித்தாந்த அத்வைதவிவேகசபை கூட்டப்புக்கு நடாத்திய உபந்நியாசமொன்றில் தமிழ்ப்பாஷையைக் கைவிட்டு இங்கிலீஷ்பாஷையைக்கற்போர் இரட்டைக்காண்மிருகங்களென்றும் மூண்டைமக்களென்றும் மொழிந்ததுபற்றி நேர்ந்தவற்றை ஆரியஜனப்பிரியனிலும் பலவாறு விரித்தெழுதப்பட்டிருத்தலும், இவரைப்பற்றிய மற்றும் சிலவும் கண்டாம்: யாம்கண்டவற்றுள் ஈண்டுக்காட்டிய இவற்றுனே அவ்வவ்வுழியும் பெரியாரையும் அவரருளிய மெய்ந்நூன் முதலியவைகளையும் இவர்வைதலும் பிரசித்தமேயாகலின் அச்சைவவுபந்நியாசப் பிரசித்தம் அப்பிரசித்தமேயாவதல்லது பிரசித்தமாத லமையாதென்க.

ஓகோ! இவ்வாறு சென்றபத்திரங்களைத்தொகுத்து ஈண்டுக்காட்டன் மிகையாம்பிறவெனின்,—அறியாதுகூறற்க. இன்னோரன்னபண்புடையார் ஆசாரியராகாரென்பது புலப்படக்காட்டல்வேண்டிற்றுகலின், இது மிகையாவது யாங்ஙனம்? அற்றேல், இவ்வகைநிகழ்வதும் அதற்கியைந்த இறையிறுப்பதும் புலவர்க்கியல்பாகலானும் இவற்றுள்ளுஞ் சிலவற்றிற்கு இவரானும் இவர்க்குரியரானும் பதிலிறுக்கப்பட்டு முளவாகலானும் இவை வழூவாகாவேயெனின்,—இக்கூற்று மிகநன்று, பிறர்க்கு இகன்மூளாவாறு உலகைத்தழீஇப் பிரசங்கித்தலியல்பாவதல்லது முன்னர் அவைக்களன் வசைப்பிரசங்கமடா

த்தி அதை இசைப்பிரசங்க மாக்கிக்கோடற்கு மிகமுயன்றுதி ரிதல் புலவரியல்பன்மையின் வழுவாகாமை சாலாதென்க. இதுபற்றியன்றே, தெய்வப்புலமைப் பெருநாவலரும் "நாநல மென்னு நலனுடைமை யந்நலம் - யாநலத் துள்ளதூஉ மன்று. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற் - காத்தோம்பல் சொல் லின்கட் சோர்வு. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளா ரும் - வேட்ப மொழிவதாஞ் சொல்." என்றிங்ஙனம் நாவலரா வார்க் கிலக்கணங்கூறியதூஉ மென்பது.

கூறவே, கல்வியறிவுமுதிர்வோடு இக்கீர்மைய இலக்கணமு மெய்தியோரே நாவலராதலின் அவர் போதித்தற்கும், மற்றை யர் நூலுரைகளைத் திருத்துதற்கும் வல்லுநராதலும், அவை யெய்திலர் அன்னரல்லராதலும் திண்ணமாக, அவ்விலக்கண மெய்தாதுவைத்தும், வல்லுநராத லெங்ஙனம்? பல்லோரான் மதிக்கப்பட்டுவழங்கும் நூலுரைகளைப் போலிநூல் போலியுரை யென்றும், பிறரை மடவோர் பிதற்றுவோரென்றும், அவர் சொற்களை மடமையுரை பிதற்றுரையென்றும் சொற்பிரயோ கஞ்செய்து மறுத்தற்கிவரார்? இவர்க்கு அதிகாரமேற்றிவிடுத் தார் யாவர்? அவர்க்கு அதிகாரமேற்றித் தூண்டியார் யாவர்? பன்னூல்களினும் பரந்துகிடக்கும் அரும்பொருள்களைச் சிறுவ ருமெளிதுணரப் பலபாலபாடங்களும் வினாவிடைகளும் சூசன ங்களுமாகத் தொகுத்தும், வேறுசிலநூலுரைகள் நூதனமாக வியற்றியும், கல்விபயில்வோர்க்கு இன்றியமையாதனவாகிய பழையநூலுரைகள் பலதிருத்தியும் அச்சிற்பதித்துபகரித்தவ ரும், பலநன்மாணாக்கர்களுக்குக் கல்விகற்பித்து வித்துவசிரோ மணிகளாக்கினவரும் இத்திற மேலுநிகழவேண்டுமென்னும் வே ட்கையால் சைவப்பிரகாசவித்தியாசாலைகளைத் தாபித்தவரும், நன்னெறியிற்றலைநின்றவருமாகிய ஆறுமுகநாவலரவர்கள்தயை நாடியோ மற்றியாதுகுறித்தோ வித்தியாசாலையி லுபாத்தியா யராயிருந்துழி அவர்மாணாக்கருளொருவரென அத்தருணத்தே

உரிமைபாராட்டித் தம்பெயரை முத்துக்குமாரசுவாமி திருவருட்பாவில் இவர்பதித்திருந்தும், அவரும் அவர்போலவே உலகுக் குதவிபுரிதல்நாடி, உயர்ந்தநூலுரையாதிகளுருற்றல் பிரபல சங்கமருவிய பெருநூல்களாதிய அச்சிற்பதித்தன்முதலியன எவருமெச்சமேற்கொண்டு, செந்தமிழைவளர்த்த சீரியராய் முற்காலத்திருந்தவரும், தற்காலத்திருப்பவருமாகிய மற்றும் வித்துவசிரோமணிகளும், புனைதற்கஞ்சிய ஆசிரியத்தலைமையைத் தக்கவாபெறுது தாமேகொள்வது தகுமோ? என்றிங்ஙனம் எவருமிசையாநிற்க, இவர் அதுபாராட்டாதது, "அவமதிப்புங்கொள்ளார் கருமமேகண்ணாயினார்" என்றபடி உலகுதவிச்செயலின் மேற்கொண்ட ஊக்கத்தி னுறைப்பாற்போலும்.

இனியேனும் "வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான் - றேன்சிலம்பி யாவருக்குஞ் செய்யரிதாம் — யாம்பெரிதும் - வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காணெல்லார்க்கு மொவ்வொன் றெளிது." என்றார் ஔவையாருமாகலின், நாம் அறியாதன அறிந்துளாரும் மிகப்பலரிருப்பர். "அரியகற் றுசற்றார் கண்ணுந் தெரியுங்கா - லின்மை யரிதே வெளிறு." என்றலின் யாமே அறிவின் முதிர்வுடையமெனக் களிப்பதடாதென்று அடங்கியொழுகுவதே முறைமை. அங்ஙனமன்றி, அத்தலைமை மேற்கோடலில் விருப்பேல், தங்கல்வியறிவொழுக்கங்களைப்பற்றித் தாலூகரியாதிகளினுள்ள சற்சனரால் யோக்கியதாபத்திரம்பெற்று, இந்தியசக்கரவர்த்தினியாராகிய பிரிட்டிஷ்மகாராணியாரது கௌரவதுரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுப், பிரசித்தம்பெறவரின், கலைவல்லோ ரொவ்வொருவரும் தாமேயடங்கி யொழுகுவதுமன்றிக் கடாக்களுக்கியைந்த விடையுமீவர். இதுவே செல்வியநெறியாம். இந்நெறியிற்சேறலகன்று, கொடுநெறிமேற்கொண்டு வசைகூறி ஏற்றுகளின் காற்றுகளி னுதுக்குதலுமன்றிப் "பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந் - திறன்றெரிந்து கூறப்

பமேம்” என்றபடி இவருளைந்துபட்டு மையுந்திறத்தனநாடி அலர் தூற்றுவதும் புரிவர். இவ்வாறு பரிபவமெய்துவது பண்டிதர்க்கமைதியன்றாகலின் இஃதெய்தாவாறு இவரும் இச்செயல் பூணவெஃகும் ஏனைப்பண்டிதரும் குறிக்கொண்டொழுகுவது கடமையாமென்பது.

அம்மம்ம இது சாலவழகிது! இவருபந்நியாசத்துள் இகழற்பாலன பலவேனும் புகழற்பாலனவும் சிலவுளவாகுமேயெனின்,—ஒவ்வோர் பயனுடிப் பிறர்வெருவாறு இனிதியற்றியனவும் சிலவுண்டு: நேரோ சிலபிரசங்கமேனும் கேட்டறியின் உண்மை வெளியாம். அன்றி, இவரைப்பற்றிய பலபத்திரிகைகள் தேடிக் காணினும் இவரியல்புகளை அவைதேற்றுமென்க. அற்றேல், அனைவர்க்கும் உண்மைநெறிகளை உளங்கொளப்படுத்திப் பரமத கண்டனம்புரிந்து தமது சைவசித்தாந்தக் கொள்கையைப் பரிபாலிக்கும் பண்புமுதலியபற்றிச் “சைவசமயசிகாமணி” யென்றும் “பரசமயகோளரி” யென்றும் “நாவலப்பட்டாபிதானத்துக்குப் பாத்திரர்” என்றும் இவரைப் புகழ்ந்தமையயன்றி இவர்ஞானாமிர்தமென்னும் பத்திரிகையையும் “நாத்திகமுதலிய துர்மதவிஷாவேசத்தால் துயரமுற்ற நம்மவர்களுள்ளங்குளிர ஞானாமிர்தமென்னும் ஓரமிர்தம் புத்தியென்னு மந்தரத்தாற்கடைய ஓர் நாவலரென்னுந் திருப்பாற்கடலில் பிறந்துலாவுகின்றது. இப்பத்திரிகையுதித்து இத்தென்னாட்டை அலங்கரிப்பது” என்றிங்ஙனம் பலவாறு ஆதீனத்தார் அரசர் சிலபத்திரிகையாளர்க ளாதியரால் கடிதமுதலியவற்றிற் புகழப்பட்டிருத்தல் காண்டுமேயெனின்,—அடுத்தகாலத்தும் அவ்வியல்பில்லையாக அவ்வத்தருணத்தினிகழ்த்திய பிரசங்கமாதியபற்றி நிகழுமவற்றையே இலக்காகக்கொண்டுநோக்கின் இவரினும் இத்திறப்புகழ்ச்சி ஏற்றமாகப்பெற்றோர் எண்ணிறந்தோ ருளராவராகலின் அவ்வவரியல்புமுற்றுந் தொகுத்தாய்ந்து தரமெடுப்பதன்றோ சால்பு.

அங்ஙனமாயின், இலைமறைகாய்கள்போல ஆங்காங்கு மறைபட்டுக்கிடந்த அரியவற்றைத் தொகுத்தெழுதினமையும் சிலவற்றை வடமொழியினின்று மொழிபெயர்த்தும் சொந்தமாகவுமியற்றினமையும் புலமைத்தாரத்தவன்றோ? இவர் புலவரல்லரோ? எனின்,—கருத்துநுனியாது விபரீதத்தா னிங்ஙனம் கடாவற்க. இவையெல்லாம் புலமைத்தாரத்த வன்றென்பதும் இவர்க்கு நாவலப்பட்டாபிதானம் அமையாதென்பதும் இவர் பிரசங்கமாதியவற்றில் வல்லரல்லரென்பதும் இவர்மாட்டு உலோகோபகாரகுணம் இன்றென்பதும் இவர் புகழ்ச்சிக்குரியரன்றென்பதும் பிறவும் நங்கருத்தன்று. மற்றென்னெனின், — ஏனையரினும் இவர்சிறக்கினும் "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் - செயற்கரிய செய்கலா தார்." என்றார் தெய்வப்புலவருமாகலின் புலமைத்தாரமுடைய பிறராலும் செயற்குரிய இத்திறஞ்செய்தமையானே அவர்க்கெய்தாத அவ்வாசிரியத்தலைமை இவர்க்கெய்துறாது. அங்ஙனமாக, எய்தியதாகவுன்னி ஏனோரையெல்லாம் ஏதமுடையாராக்கி இழித்துரையாடாநிற்பது இவர்க்குப் பெரியதோரநீதியாம். என்பது ஆன்றோர்பலர்க்கும் ஒப்பமுடிந்தகருத்தாகலின் அதுவே நங்கருத்துமென்பது. அற்றேல், இவர்செய்துள்ளன ஏனைப் புலவருஞ் செய்யவல்லரேல் செய்யாததென்னெனின்,—இவற்றினுஞ் சிறந்தனவாகப் பிறர்செய்துள்ளன இவர்செய்யவல்லரேல் செய்யாததென்னென எதிர்வினா நிகழுமன்றே. ஒவ்வொருவர்சித்தம் ஒவ்வொருவகையிற் சேறலியல்பாகலின் அவ்வகையினிலவி உலகிற்குக் கல்வியிற் றம்மாலியன்றவுதவிபுரிவது கற்றவர்கடமையாம். அங்ஙனமவர் புரிந்துபோதரும் நன்றி மறந்து இவ்வாறு முரணிவினாதல் வினாவன்றென்க. அற்றேல் அதுநிற்க. "இவ்வண்ணம் பத்திரிகை தீட்டலாதியவுடையார் இத்தமிழ்நாட்டில் அநேகருளராக இந்நாவலரொருவரையே இறப்பவு மிலக்காகக்கொண்டுதீட்டுவது கடனன்றாம்போலுமெ

னின்,—முன்னூதுமொழியற்க. அவரெல்லாம் ஒவ்வோர்கோட்பாடுபற்றி மனவொருமை முதலியவின்மையின் ஓரொருவரைச்சுட்டி வரையாதிற்க; இவர் "கரும்பிருக்க விரும்புகடித்தெய்த்தவாறு"கக் குணக்கவர்ச்சிகொளாது குற்றக்கவர்ச்சியையே தனிமேற்கொண்டு தம்புல்லறிவுநிலையிடைச் சில்லிழிவுநாட்டி முன்னோராதியரோடு நன்னிலைமையினிலவும் எமதுகுரவரையும் சுட்டிக் கொண்வேமறுத்தும், யாம் இவர்நூலுரைமுதலியவற்றில் விழுப்பமிலவாய் முறைபிறழ்ந்துகிடக்கும் வழுக்கள் பலமலிதல் ஓர்ந்துவைத்தும் வித்துவாபிமானத்தான் அவற்றை மேற்கொளாது நியாயமுகத்தானே எண்டைக்கியைவ சில மட்டுங்காட்டி இத்தொழில்கோடல் இவர்க்கியைவ தன்றென் பதுமட்டும் காட்டிப் போந்தாமாகலின் கடனன்றுதல் யாண்டையதென்க.

மேலோர் நூலுரைகளுக்குங் குற்றங்கூறுதற்கு நாம் யார். அதுபுரிவது நமக்கு முறையன்று. எனக்குணியாது புறம்பெய்திச் சலவாதியேயாய் நின்றுவைவது இவர்தமக்கு மாண்பே. இவர்க்கெதிர்நிலவி இவர்நவிலுமிழிப்புரைகளையும் மறுக்குநீரவல்லவாம் வெற்றுரைகளையுமறுப்பது எமக்கு மாண்பன்மையின் அவற்றையொதுக்கிக் களைதற் கிலக்காதற் பாலனவற்றை மட்டும் நியாயமுகத்தானே களைந்தாம். இன்னும் இத்திறத்தன மிகப்பலவுள: அவையும் ஒருவாறு காட்டற்பாலனவேயாயினும், அசப்பியமும் அபவாதமுமாயிருத்தலின் அவற்றை ஈண்டுக் காட்டிற்றிலம். செந்நாப்போதார் நன்றுவலர் நாடியொழுகுமாறு "யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற் - சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு" என்று வலியுறுத்தும் அது கடைப்பிடியாது வலிந்துமுற்பட்டு எம்மவரை வைதுரைத்தமைகாரணமாக யாம் இத்துணையும் நியாயமுகத்தானிகழ்த்திய இவற்றைத் தந்தவறு நாடி யொருப்பட்டேலாது இவர் மேலும்வைவான் தலைகிமிர்ப்பின் அத்தலையெடுப்புக்குலையத் தாக்

குமாறு, இவர் ஷெ சைவப்பிரகாச வித்தியாசாலையினின்று விலக்கப்பட்டமைமுதல் சமயாபிவிர்த்தியோடும் செந்தமிழபிவிர்த்தி செய்குதுமென முப்பதிற்றியாண்டாகப் புரிந்துபோதருஞ் செயல்களை வழாதபடி யொருங்குதொகுத்து, இவரியல்பு முற்றும் விளக்கத்தக்க கதாவடிவ வச்சிரதண்டமாகத்திரட்டி, எமது பூர்வசுலாப்பிரசங்க நிகேதன சபையார் அவ்வச்சிரதண்டமும் அரசதண்டமும் ஒருங்கிறுப்பான் உத்தேசித்துளராகலானும், இவரைப்பற்றி ஞானபோதினியென்னும் பத்திரிகையாதியவற்றின் எழுதப்பட்டும் வருதலானும், ஸ்தாவிபுலாகநியாயம்பற்றி ஈண்டுக்கூறுமிவைகொண்டே பிறவும் யூகித்துணருமாறு சங்கிரகித்துச் சாற்றினாமெனக் கொள்க.

இதில் ஏனையரினும் எமது பூர்வசுலாப்பிரசங்க நிகேதனசபையார் முனைந்துதுணிந்தெழுத வுத்தேசிப்பதற்கு நிமித்தமற்றெவனெனின்,—அச்சபாமாளிகையின்கண் முன்னர் எவர்க்குமின்பமீதூர அரியசைவவுபந்நியாசத்தலைவராய் மிக்ககௌரவம்பெற்று வீற்றிருந்த வடலூர் இராமலிங்கசுவாமிகளையும், ஆங்கதன்பின்னர், எம்போலியர்க்கும் உயிர்க்குறுதிபயக்கும் அரிய நூலாராய்ச்சிகளில் ஊக்கங்கிளருமாறு நல்லறிவுச்சுடரேற்றிக் கொண்டு, பன்முறை உபந்நியாசத்தலைவரா யமர்ந்திருந்ததுமன்றி, இப்பொழுதும் இடையிடையேயெழுந்தருளி அரியசைவவுபந்நியாசங்களைநடாத்தி ஷெ சபையை அபிவிர்த்திசெய்துவரும் சிதம்பரம் ஈசானியமடாலயம் இராமலிங்கசுவாமிகளையும், மற்றும் இச்சபையார் வழிபடுகுரவர்களாகக் கொண்டுள்ள பெரியார்களையும், அவரியற்றியருளிய அரியநூலுரைகளையுஞ்சுட்டி மாறுபட இவர்வரையத்துணிந்தாராகலின் இவர் சிறுமை நூற்றுமாற்றான் எங்குரவராதியர்பெருமை தேற்றுமாறு அவர் துணிந்தெழுத வுத்தேசித்துளரென்பது. என்னே! இவர் நல்லொழுக்கமும் அபவாதநிக்கிரகமும்பொதிந்த கடிதமொன்று இவரானோ இவர்க்குரியரானோ வெளியிடப்பட்டிருப்

பது கண்டுவைத்தும் அதுகணித்துப் பதிலிறுக்காதகல்வதெ ன்னெனின்,—மேற்கண்ட கதாவடிவ வச்சிரதண்டம் வெளி விடரேின், அதில் அதனையும் அதற்கின்றியமையாத பிறவற் றையும் ஒவ்வோருறுப்புக்களாக அமைப்பது நாட்டமாகலின் அப்பயனில்கடிதத்தை ஈண்டும் பரிகரிப்பான் மேற்கோடல் அநாவசியகமேயாம்.

இஃதினிது வியக்கற்பாற்று. பிறரான்வெளியிடப்பட்டதெ ன்பது அக்கடிதத்தாற் புலனாகாநிற்பவும் இவரானே இவர்க் குரியரானேவென ஐயப்படவமைந்த தெற்றிற்கெனின்,—தஞ் சொல்லாண்மைமுற்றும் தேற்றுவிப்பான் பல்லாண்டுமுயன்று பரிந்தெழுதிய திராவிடப்பிரகாசிகைநூலேயே அச்சிற்பதிப்பிப் பான் நச்சிப்போந்தா ரொருவருமின்றாகத் தம்விளக்கத்தைத் தாமேதேற்றிப் பதித்துக்கொண்டமை அந்நூன்முகத்தா னே ற்படுதலானும், அங்ஙனமே இவருபந்நியாச விளம்பரங்களுள் ளும் சில கையெழுத்திட்டாரின்றியே வழங்கல்காண்டலானும், ‘இலக்கணவிளக்கப்பதிப்புரைமறுப்பு’ இவர்மாணாக்கரொருவ ரா லியற்றப்பட்டதென அதிற்பதித்திருப்பினும் ஷெ பிரகாசி கையில் அதுவும் இவரியற்றியநூலெனவே இசைக்கப்பட்டிரு த்தலானும், அக்கடிதத்தும் அபிதானங்குறியாது உறுதிகூறு வோனென்றே இறுதியினிறுக்கப்பட்டிருத்தலானும் இவரைப் பற்றியன பெரும்பாலும் இவரான் வெளியிடப்படுபவேயென் பது போதருதலின் அங்ஙனம் ஐயுற்றுக் குறித்ததென்க.

௩௪ அஃதாக. யாழ்ப்பாணத்து நல்லூர்-ந-வே-கன கசபாபதி ஐயரென்பவர் மருகரும் மாணாக்கரும் வேறுசிலரும் நவீனராய் இவரொக்க அதிக்கிரமித்துச் சிற்சிலரைச்சுட்டி எழுதப்பட்டனசில பத்திரிகைகளில் வழங்குகின்றனவே அவற் றைக் குறிக்கொளா தொழிந்ததென்னெனின்,—மறுப்பெழுத வல்லரோவென ஆராய்வுழி அவர் தம்புலமைவெளிப்பட உல

ற்குதவியாகப்புரிந்தவை யின்னவென்பதூஉம் அவர் இன்ன இராசாங்கத்தாரால் இன்னமுதன்மையதிகார மெய்தியவரென்பதூஉம் புலப்படாமையானும், முன்னொடும்பின்முரணப் பயனிலவாக வினாதலாதியவுடைய அவரையிலக்காக்கல் மகாபாணப் பிரயோகத்துக்கு முயலையிலக்ஷியப்படுத்தல்போல வடுச்சொற்கேதுவாமெனப் பலருமெதிராதொழிதல் காண்டலானும் யாமுங் குறிக்கொண்டில மாயினேமென்க.

ஆயின், நிரம்பக்கல்லாத பாலிசரும் பெருநூலுரையாதிகளியற்றலின், அவற்றுண்மலிந்த வழுக்களைக் களையாவழிப் பொருளல்லது பொருளாதலும், பொருள் பொருளல்லதாதலும் ஆகுமாகலான் அதுபற்றிக் கற்றோர் கண்டித்தறிவுறுத்துவதும் அவையியற்றியோர் அவருளடங்கியொழுகுவதும் கடமையேயாக, அவ்வியல்பொழியுமாறு இவ்வியல்பினிசைப்பது அடாததாலெனின்,—ஓராதுரையற்க, இரட்டைப்புலவர் ஒருவனைத்தினெறியேகுங்கால் அவருளொருவர் ஆங்கிருந்த தேவதைகளை நோக்கி, "கேட்டவரம் பாலிக்குங் கெம்பீர தெய்வங்காள்-கூட்டமின்றிக் குந்தி யிருப்பானேன்" என்றுவினாவ; மற்றொருவர் "நாட்டுதுங்கேள் - செல்லுங்காலங்களிலே செல்லானோ மிக்காலங் - கல்லானோஞ் செம்பானோங் காண்." என்று அவற்றுள் ஒருதேவதைகூறிய கூற்றாக விளக்கியிருக்கின்றார். ஆகலின், தெய்வங்களும் இங்ஙனம் ஆலோசித்தொழுகவேண்டிய இக்காலத்திலே வரம்புகடந்தொழுகுவோரை அதிகாரமுதலியவையின்றித் திருத்துவதியலாதென முதுக்குறைவுடையரெல்லாம் அதின்முனையாது, அதிவிபரீதத்துற்பத்தனவாகப் பிறரால் வெளியிடப்படுவனவற்றைமாத்திரம் சிறிது கண்டித்தலிற் றலைப்படு மளவினிற்க; அவ்வரம்புகடந்தொழுகுவோரே முனைந்து ண்டனாசிரியராகி உலவலின் இனியேனும் யோக்கியதாபத்திரங்களோடு அதிகாரமும் பெற்றவரே இச்செயல்கோடற்குரியரென் றேப்படின் இப்போலியாசிரியரெல்லாமொதுங்க அப்புல

வர்இலகாராயினர் புறம்போதருவர். அதனல் நமதுதமிழ்ப்பா ஷையும் நன்குநிலவும். என்னுங்கருத்தானே இவ்வாறிசைத்த தாகலின் இது யாவரும் குறிக்கொளற்பாலதாவதல்லது அடா ததாதல் யாங்ஙனமென்பது.

இதுகாறும் இஃதென்சொல்லிய வாறேவெனின்,—"தன்கு ற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி - னென்குற்ற மாகு மிறை க்கு." என்னும் உத்தரவேதத்திருக்குறளிற்கு, "உலகினர் தன்கு ற்றநாடுதலொழித்துப் பிறர்குற்றநாடின் அதுகுற்றமாம்; இறை வன் அங்ஙனநாடின் அவனுக்கு யாதுகுற்றமாகும்? ஒருகுற்ற முமாகாது." இறைக்கு என்குற்றமாகுமெனவே குடிகளுக்கு அங்ஙனநாடுதல் பலகுற்றங்களுக்கும் ஏதுவாமெனவும், இப் பொருட்கண் இறையென்பதற்கு இறுத்தலையுடைய அரசனெ னுமாமெனவுங் கொள்ளக்கிடந்தன. இறுத்தல் - கண்டித் தண்டித்தல். என்றிங்ஙனம் விபரீதப்பொருள்கொண்டு, எவ் வுலகையும் இவ்வாறொழுகவென நியமிக்கவல்ல எம்மைநியமிப் பாரு முளரென்போமல்லமாறு தருக்கித் தன்குற்றநாடுதலவிர் த்து பிறர்குற்றநாடியொறுத்தலையே ஓரரசன் மேற்கொண் டால் அஃதொப்ப; தம்வழுநாடாது பிறர்வழுநாடிக் கண்டித் தலையேபேணிச் சிலபுலவர் புறப்போதருவான் மெல்லவடியிட, ஒருவர் அதிக்கிரமித்தெழுந்து சால்பினையுங் கண்டித்தலிற் றலைப்பட்டுப் புறம்போந்தனர். இத்தலையு மியம்பியவாற்றன் அவர் அச்செயல்புரிதற்குத் தக்கவரல்லராவது சரதம். ஒரு வாறு தக்கவரென்பது இராஜாங்கசத்தாரமேற்படின் பதிலு ரைக்கக் கடவமே, அஃதுழிக் கடவமல்லம், வழுக்களெனும் புழுக்கள் இழுக்கில்லையியப்பெறும் சிற்சில செய்யுண்முதலிய வினையுந்திறத்தாலே செய்யார்த வழுவில்செய்யுண்முதலிய செ ய்யவல்லாரையுமெள்ளி இத்தமிழ்நாட்டுத் தக்கார்சிசர நடுக் குந்தறுகண்ணர் சாலப் பலருளர். அன்னவர் புலவரெனப்பெ யர்பூண்டு யாங்கும் பொலிந்துதிரிதலா லன்றோ அவரைப் பொ

ருட்படுத்துத்தலைப்பெய்து அவர்பாற் சொல்லாடாமையானே: சொல்லாடின் அவர்புலமை சோர்வுபடுமாகலின் அத்திறம் திரிவதின்றாம். அப்பரிசினரையும் பண்டிதரெனப்பாராட்டல் ஆன்றதோர்வழுக்கேயாமாதலின் அவருள்ளீடுணராது மருளற்க. ஆராய்ச்சிக் இன்றியமையாதனவாகிய முன்னோர் நூலுரையாதிகள் வேண்டியமட்டுமிருக்கவும், பின்னோரியற்றியவை நன்றேயாகத் தீதேயாக அதுபற்றியவிசாரம் நமக்கெற்றிற்கு? வேண்டா: விடுக. எவர்க்கும் பயன்படத்தக்க நூலுரையாதிகளை யியற்றுதற்பொருட்டும் அதுகொண்டு நற்கதிபெறுதற்பொருட்டுமே நாங்கற்றதல்லது, கழிபோக்கர்களாகிய வழிபோக்கர்களின் கடாப்போக்கின்வழியெல்லாம் விடைபோக்கற்கும் பிறர்நூலுரைகளையுங் கண்டனங்களையும் மறுத்தற்கும் வேண்டியவற்றைநாடித் திரிதரற்பொருட்டுக் கற்றதன்றாம். அங்ஙனமாக, அந்நாட்டமேற்கோடல் காகதந்தகவேஷண நியாயத்திற்கிலக்காய்ப் பயனில்செயலேயாக முடியும். இஃதோர்ந்தும் யாமுமிதிற்றலைப்பட்டது இச்சால்பினர் கண்டனாசிரியராகாரென்பது காட்டல்வேண்டியல்லது மேன்மேல் மறுப்பெழுதலாதியமதித்தன்று. அதிகாரம்பெறாது அச்செயல்பூணுதற்கு நாமார்? "கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற் - போர்த்துநாய்க் கௌவினா ரீங்கில்லை — நீர்த்தன்றிக், கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ - மேன்மக்க டம்வாயான் மீட்டு." என்றார் மேலோருமாகலின் மிகமுயன் றரிதுகற்றகல்வியை இத்தன்மையவற்றிற்செலுத்தி வாணாள்வீணாள்போக்காது, உயிர்க்குறுதிபயப்பநாடி அவ்வுண்மைநெறி தலைக்கூடுதலே, அக்கல்விக்குப் பயனாமென்ப துணர்த்தியவாறாமென்பது.

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க் - குளித்தானைத் தீத்துரீஇ யற்று." என்பது பொய்யாமொழியாதலின் மதம் மானம் மயக்கம் அறிவின்மை முதலியனபற்றிப் பிணங்கும்

புல்லறிவாளரை ஒருவாற்றானும் உணர்த்தும் வாயிலில்லை யென்பது சான்றோர் துணிபு. அத்தகவினர்க்கு எத்துணையறிவுறுத்தினும் பயனின்றென்பது தேர்ந்தும், கற்றுளராகலின் அவரும் ஒருகாலேனும் இதுகண்ணுற்று மனக்கோட்டம்விட்டு நுண்ணறிவும் நடுவுநிலைமையுமுடையராய்த் தந்தவறு நோக்கார! நோக்குவர்! என்னும் நோக்கத்தானும் இஃது ஒருவாறெழுதத் துணிந்தது. அங்ஙனமாயின் முகவுரையில் முதுக்குறைவுடையாரையே முன்னிலையாக்கி மொழிந்ததென்றிற்றெனின்,— இவையெல்லாம் அவரறியாதனவென அறிவித்தற்கன்று, பொருளுண்மை விளங்காது ஐயுற்றவழிச் சமனிலையினின்று சீர்தூக்கியுரைத்து உலகை நல்வழிப்படுத்துதலினும் இன்னவற்றை ஆராய்ந்தறியவல்ல மதுகையினும் வல்லவரவரேயாகலின் இது, அவர்பான்முறையீடாய் அவர்க்கோர் ஞாபகக்கருவியுமாமாறுகுறித்தென்க. இங்ஙனமிசைப்பது உலகினர்பொருட்டுக்கூறும் நீதிநூல்களினும் கடவுளாதியரையே முன்னிலையாக்கி மொழியும் ஆன்றோர் கொள்கைக்கும் முரணாகாமையறிக. இன்னும் விரிப்பிற் பெருகும். சுபம்.

திருச்சிற்றம்பலம்.

விபரீதவிற்பன்னவிபஞ்சநி

முற்றிற்று.

---

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகர் திருவடிவாழ்க.

---

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20